பக்கங்கள் : பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஆடி 04 சனிக்கிழமை (19.07.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 234

## கொழும்பு கொம்பனி வீதியில் அரசு கொடுமை

# கதறி அழுது மக்கள் தடுக்கவும்

# அவர்களின் வீடுகள் இடித்துத் துவம்சம்

## உயர் நீதிமன்றம் தடை விதித்தும் அழிப்பு ஒப்பேறியது

கொழும்பு, ஜூலை19

"சார்க் " மாநாட்டுக்கான பாதுகாப்பு ஏற்பாடு என்ற பெயரில் கொழும்பு கொம்பனி வீதியில் உள்ள பல நூற்றுக்கணக்கான வீடுகளை, அவற்றில் வசிக்கும் மக்கள் கதறிக் கதறி அழுது தடுக்கவும், அதையும் மீறி இடித்துத் தகர்த்துத் தரைமட்டமாக்கியது அரசு.

இந்த வீடுகளை உடைப்பதற்கு எதிராக நேற்று முற்பகல் உயர்நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு விதித்த போதிலும், நீதிமன்றக் கட்டளை ஏதும் எழுத்து மூலம் தமக்குக் கிடைக்கவில்லை என்று தெரிவித்துவிட்டுப் பல நூற்றுக்கணக்கில் அங்கு திரண்டிருந்த கல கம் அடக்கும் பொலிஸாரின் உதவியுடன் வீடமைப்பு அதிகாரசபை தனது வீடழிப்பு நடவடிக்கையைத் தொடர்ந்தது.மக்களின் குடியிருப்புகளை முற்றாகத் துவம்சம் செய்தது.

அதனால் சீற்றமுற்ற அப்பிரதேச மக்கள் வீடுடைப்பு நடவடிக்கைக்கு எதிராக அங்கு ஒன்று கூடிக் கிளர்ந்த போது பெரும் களேபரம் ஏற்பட்டது. அவர்களைப் பொலிஸார் அடித்து, விரட்டிக் கண்ணீர்ப் புகைக்குண்டு வீசிக் கலைக்க அந்தக் கலவரங்களுக்கு மத்தியில் வீடுடைப்பு அட்டகாசம் தொடர்ந்தது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவில் மீனவர்கள் மீது 'கிபிர்' விமானங்கள் தாக்குதல்

கிளிநொச்சி, ஜூலை19

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள முள்ளிவாய்க்கால் பகுதியில் கரைவலைத் தொழிலில் ஈடுபட்டவர்கள் மீது ஸ்ரீலங்கா வான்படையின் கிபிர் ரக விமானங்கள் நடத்திய குண்டுத் தாக்குதலில் ஒருவர் காயமடைந்துள்ளார். நான்கு படகுகள் சேதமடைந்துள்ளன.

முள்ளிவாய்க்கால் பகுதியில் தொழிலா

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தண்டவாளத்தைச் சேதப்படுத்த முயன்றதாலேயே மக்கள் மீது கண்ணீர்ப்புகைக்குண்டு ஏவினோம்!

### கொம்பனித் தெருச் சம்பவம் குறித்து பொலிஸ் பேச்சாளர்

கொழும்பு, ஜூலை 19

கொழும்பு கொம்பனி வீதியில் வசிக்கும் மக்கள், ரயில் தண்டவாளத்தைச் சேதப்படுத்த முயன்றதை அடுத்தே பொலிஸார் கண்ணீர் புகைக்குண்டுகளை ஏவினர்.

-இவ்வாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ரஞ்சித் குணசேகர பி.பி.ஸி. தமிழோசையிடம் தெரிவித்திருக்கிறார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

நீதிமன்ற உத்தரவு குறித்து நகர அபிவிருத்திசபை எதனையும் பொலிஸாருக்கு கூறவில்லை. அதன் காரணமாகத் தான் கொம்பனி வீதியில் இருந்த வீடுகளை இடித்துத் தகர்த்து அங்கிருந்தவர்களை வெளியேற்ற முற்பட்டோம்.

இதேவேளை, குறிப்பிட்ட வீடுகளை

(12 ஆம் பக்கம் பார்க்க)



### தமிழக மீனவர்கள் மீதான தாக்குதலைக் கண்டித்து

## தி.மு.க. நடத்தும் போராட்டத்துக்கு தமிழகக் காங்கிரஸூம் ஆதரவாம்

சென்னை, ஜூலை19

இலங்கைக் கடற்படையால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதைக் கண்டித்து ஆளும் தி.மு.க. இன்று மேற்கொள்ளும் உண்ணாவிரதப் போராட்டத்தை வரவேற்கிறோம்; ஆதரிக்கிறோம்.

தமிழக காங்கிரஸ் தலைவர் தங்கபாலு மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மீனவர் பிரச்சினை தொடர்பாக அமைக்கப்பட்டுள்ள நாடளுமன்ற - மாநில உறுப்பினர்களைக் கொண்ட குழு விரை வில் பிரதமரைச் சந்தித்து பேச்சு நடத்தி தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஆளும் தி.மு.கவின் ஏற்பாட்டில் தமிழ் நாட்டில் பரவலாக இன்று உண்ணாவிரதப் போராட்டம் நடத்த ஏற்பாடாகியுள்ளது.

அ.தி.மு.க. சார்பில் நாகபட்டினத்தில் ஆர்ப்பாட்டம் நடத்தப்படுகிறது.

(விரிவான செய்தி 4ஆம் பக்கத்தில்)

(01)

## ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளராக தென்னாபிரிக்காவின் தமிழ்ப் பெண் நவநீதம்

கொழும்பு, ஜூலை 19

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் கவுன்ஸிலின் ஆணையாளராக தென்னாபிரிக்காவைச் சேர்ந்த நீதிபதி திருமதி நவநீதம் பிள்ளை என்பவரை ஐ.நா. செயலாளர் நாயகம் பான்கி மூன் பரிந்துரைத்துள்ளார் என்று அனைத்துலக செய்தி நிறுவனமான ரொய்ட்டர்ஸ் தெரி வித்துள்ளது. தற்போதைய ஆணையாளரான கனடா வைச் சேர்ந்த லூயிஸ்



(12 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகளை முழுமையாகத் தோற்கடிக்க மேலும் 2 வருடங்கள் கேட்கிறார் இராணுவத் தளபதி

### அவர்களில் இன்னும் ஆயிரம் பேரே எஞ்சியுள்ளனர் என்கிறார்

கொழும்பு, ஜூலை 19



தமிழீழ விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்க மேலும் இரண்டு வருடங்கள் தேவை என்று இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கண்டியில் உள்ள தலதா மாளிகைக்கு நேற்று வெள்ளிக்கிழமை சென்று மத வழிபாட்டில் கலந்துகொண்ட பின்னர் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு வைத்து மேலும் கூறியதாவது:-

வன்னியில் நிலப்பரப்பை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவது எமதுநோக்கமல்ல. அங்குள்ள பகுதிகளை மீட்டு

(12 ஆம் பக்கம் பார்க்க)

### தம்பசெட்டியில் தனித்திருந்த வயோதிபர் பட்டப்பகலில்

## கழுத்து நெரித்துக் கொலை செய்யப்பட்டு வீட்டிற்குள் வைத்து எரிக்கப்பட்டார்!

மந்திகை, ஜூலை19

வீட்டில் தனித்திருந்த முதியவர் ஒருவர், கழுத்து நெரித்துக் கொலை செய்யப் பட்டு, வீட்டில் இருந்த பொருள்களைப் போட்டுப் பட்டப்பகலில் தீமூட்டி எரிக்கப்பட்டுள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் படை நடவடிக்கைப் பகுதியில் ஒருவர் வெட்டிக்கொலை! 6 பேர் மாயம்!!

கிளிநொச்சி, ஜூலை19

மன்னாரில் படை நடவடிக்கை இடம் பெறும் பகுதிகளை அண்மித்த இடங்களில் உள்ள தமது உடைமைகளை எடுப்பதற்காகவும் வயலில் நீர் பாய்சுவதற்காகவும் சென்றவர்களில் ஒருவர், படையினரால் கொலை செய்யப்பட்டுள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் [illegible] தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீவக வலயத்தில் தர உள்ளீட்டு செயலமர்வு

தீவக வலயப் பாடசாலை ஆசிரியர்களுக்கான தர உள்ளீட்டுச் செயலமர்வு எதிர் வரும் 22ஆம் திகதி நடைபெறும் என்று வலயக் கல்விப்பணிப்பாளர் வ.இராதாகிருஷ்ணன் அறிவித்துள்ளார்.

இச்செயலமர்வு நேற்று நடைபெறுவதாக இருந்து ஒத்திவைக் கப்பட்டுள்ளது என்றும் - ஏற்கனவே அழைக்கப்பட்ட சகல ஆசிரியர் களையும் 22ஆம் திகதி நடைபெறும் செயலமர்வில் கலந்து கொள்ள வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மரண அறிவித்தல்கள்

### செல்வி கேமாவதி செந்தில்நாதக்குருக்கள்

வண்ணார்பண்ணை, சிவலிங்கப்புளியடியைச் சேர்ந்த கேமாவதி செந்தில்நாதக்குருக்கள் நேற்று (18.07.2008) வெள்ளிக் கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மகேஸ்வரக்குருக்கள் - சாரதாம்பாள் தம்பதியினரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற செந்தில்நாதக் குருக்கள் மற்றும் சங்கரம்மா தம்பதியரின் அன்பு மகளும், ரேவதி, நளினி, சுமதி, ஸ்ரீஸ்கந்தராஜா, கமலா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற பரிபூராணனந்த சர்மா மற்றும் சதானந்தசர்மா, நாகேஸ்வரக்குருக்கள், சண்முகானந்தசர்மா, சுகந்தகலா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று வெள்ளிக்கிழமை மாலை நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*சிவலிங்கப் புளியடி,*
*யாழ்ப்பாணம்.*
*தொ.பே- 222 7192* (76452)

தகவல்:
குடும்பத்தினர்.

### ஆறுமுகம் வைத்திலிங்கம் பரமலிங்கம்

(பிரபல கட்டட ஒப்பந்தகாரர், பருத்தித்துறை)



வட்டுக்கோட்டை, தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட ஆ.வை.பரமலிங்கம் பிரபல கட்டட ஒப்பந்தகாரர் நேற்று (18.07.2008) வெள்ளிக்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் பருத்தித்துறையைச் சேர்ந்த காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும் திருமதி ஜெ.தங்கமலர் (ஜேர்மனி), திரு.ப.சித்திரவேலாயுதம் (இளைப்பாறிய பொலிஸ் இன்ஸ்பெக்டர், வவுனியா), திருமதி சு.செல்வமலர் (அதிபர்,மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), நா.திலகமலர், இன்பமலர் (உதவிக் கல்விப் பணிப்பாளர் (அழகியல்), வடமராட்சி வலயம்), தங்கவேலாயுதம் (சுவிஸ்), அன்பு மலர் (ஆசிரியை, யா/வேலாயுதம் ம.வி.,பருத்தித்துறை), செந்தூர்வேலாயுதம் (Walkers Travels, Colombo) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற சோதிடர் அமிர்தலிங்கம் (தொல்புரம்), சரஸ்வதி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், ஆ.ஜெகநாதன் (ஜேர்மனி), திருமதி சி.லோகேஸ்வரி (ஆசிரியை, வவுனியா விபுலானந்த ம.வி), வை.சுந்தரேசன் (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), சி.நர்க்ராசா, வே.சுகுமாரன் (வீதி அபிவிருத்தித் திணைக்களம், யாழ்ப்பாணம்), சுபோதினி , பரமேஸ்வரி ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற ஜெயக்குமார், கலைக்குமார், சுரேஸ்குமார், உதயகுமார் (ஜேர்மனி), மகிழ்தினி (ஜேர்மனி), சியாமினி (நீதிமன்றம்,வவுனியா), சுதர்மன் (வவுனியா), காலஞ்சென்ற சுதர்சன், மணிபரன், மணிமாறன் (சுவிஸ்), துவாரகன் மாணவன் (யா/புற்றளை ம.வி), காருண்யா (மாணவி, யா/புற்றளை ம.வி), சாரண்யா (மாணவி, கொ/பம்பலப்பிட்டி இராமநாதன் இ.ம.கல்லூரி), சாருகா (மாணவி, கொ/முகத்துவாரம் இந்துக்கல்லூரி), ஜெயபரன் (மாணவன், கொ/முகத்துவாரம் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேரனும் நிவேதா, கவிதா (ஆஸ்திரேலியா), ஜெயக் குமார் (ஜேர்மனி), மதுமிதா, திவ்பன் (ஜேர்மனி), சதுர்ந்திகா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.07.2008) ஞாயிறு மு.ப. 10 மணிக்கு 'துவாரகை', புலோலி கிழக்கு இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12 மணிக்கு பருத்தித்துறை சுப்பர்மடம் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி செ.சுந்தரேசன்
(மகள்)

*'துவாரகை',*
*புலோலி கிழக்கு, பருத்தித்துறை.* (76241)

### கணபதிப்பிள்ளை பாலசுந்தரம்

(முன்னாள் கணக்காளர், லைடன் கம்பனி, யாழ்ப்பாணம்)



நயினாதீவைப் பிறப்பிடமாகவும் மூனாமலை வீதி, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை பாலசுந்தரம் நேற்று முன்தினம் (17.07.2008) வியாழக் கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகனும், நகுலேஸ்வரியின் அன்புக் கணவரும், சுந்தரி அம்மா, காலஞ்சென்ற காந்திமதி, மீனாம்பிகை, கமலாம்பிகை (பிரான்ஸ்), இராமலிங்கம் (இந்தியா) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், சிறீஸ்கந்தராசாவின் (தினேஸ் வெதுப்பகம், மானிப்பாய்) மைத்துனரும், ஜெயந்தி (லண்டன்), ஜெயக்குமார் (உதவிப்பணிப்பாளர், IDM கணனிக் கல்லூரி, யாழ்ப்பாணம்), ஜெயவாணி, ஜெயச்சித்திரா (ஜேர்மனி), ஜெயரூபன் (ஆசிரியர், யாழ்/நாரந்தனை றோமன் கத்தோலிக்க பாடசாலை), ஜெயச்சந்திரன் (கணனி இணைப்பாளர் லங்கா கிளியர் - நஷனல் செக்கிளியறிங் கவுஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கருணாகரன் (லண்டன்), திலகராணி (பிரதேசசெயலகம், சண்டிலிப்பாய்), மகேஸ்வரன் (ஜேர்மனி), நிர்த்திகா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஜெனனி, சாஜினி, கவினாஸ், சுவஸ்திகா, டிலக்ஷிகா, மதிஷன், சிவானி, தக்ஷ்சனன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.07.2008) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மூனாமலை வீதி,*
*மானிப்பாய்.*
T.P. 0214591132 (76241)

தகவல்:
குடும்பத்தினர்.

# நல்லைக் கந்தன் உற்சவ காலத்தில் வழமையான செயற்பாடுகளை முன்னெடுக்க முடிவு

நல்லூர், ஜூலை 19

அடுத்தமாதம் 6 ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த பெருந்திருவிழாக் காலத்தில் வழமையாக மேற் கொள்ளப்படும் புறச்செயற்பாடுகளை இம்முறையும் முன்னெடுப்பது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஆலய உற்சவ ஏற்பாடுகள் தொடர்பாக ஆராய்வதற்காக நேற்று நடைபெற்ற கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

மாநகரசபை ஆணையாளர் மு.செ.சரவணபவ தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் தொண்டர் அமைப்புக்கள், இந்து இளைஞர் மன்றம், இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.பிரிவு, சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ், ஆலய அறங்காவல்சபை ஆகிவற்றின் பிரதிநிதிகள், துர்க்கா மணிமண்டபப் பிரதிநிதிகள் மற்றும் மின்சாரசபை, இ.போ.ச., தனியார் சிற்றூர்திச் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள், மாநகரசபை திணைக்களத் தலைவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் வருமாறு :-

* மின்சார (வெளிச்ச) வசதிகள் வழமை போன்று ஆலயச் சுற்றாடலில் இருக்கும். மின்வெட்டு உள்ள வேளைகளில் மாற்று நடவடிக்கை மூலம் மின்வெளிச்சம் கிடைக்க மின்சாரசபை நடவடிக்கை எடுக்கும்.
* சுகாதார சேவைகள் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும். மக்களின் வசதிக்காக தற்காலிக மலசல கூடங்களும் அமைக்கப்படும். குடி தண்ணீர் வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.
* உணவு நிலையங்களிலும் அன்னதானம் நடைபெறும் மண்டபங்களிலும் சுகாதார நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்படும்.
* பிரதிட்டை செய்யும் பக்தர்களினதும் அடியழிக்கும் பக்தைகளினதும் தொற்று நோய் தடுப்புக் கருதி ஆலய வீதிகளில் பரவப்படும் மண் பரிசோதனை செய்யப் படவுள்ளது. நாய்களின் நடமாட்டங்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.
* பக்தர்களின் நலன்கருதி இ.போ.ச பஸ் வண்டிகளும் தனியார் பேருந்துகளும் இந்து மகளிர் கல்லூரி, அம்மன் வீதி பகுதி களில் தரிக்க ஏற்பாடு செய்யப்படும்.
* வழமைபோன்று 8 இடங்களில் வீதித்தடை ஏற்படுத்தப்படும். நேரகாலத் துடன் அதாவது வீதித்தடை நடைமுறைப் படுத்துவதற்கு முன்னதாக தமது வாகனங் களில் ஆலயத்திற்குவரும் பக்தர்களை அவர்களது வாகனங்களை ஆலயத்தை அண்டிய பகுதிகளில் நிறுத்துவதால் ஏற்ப டக்கூடிய கஷ்டங்களைத் தவிர்க்கும் பொருட்டு, ஆலயத்திற்கு அண்மையில் வாகனங்களைக் கொண்டு செல்ல வேண்டாம் என சம்பந்தப் பட்டவர்களுக்கு அறிவுறுத்தப்படவுள்ளது.
* வீதித்தடையில் தொண்டர்களுடன் பொலிஸாரும் சேர்ந்து கடமையாற்றுவார்களா என்பது குறித்து அவர்களுடன் கலந்துரையாடிய பின்னரே முடிவு செய்யப்படும். (அ-1-111)

## உடுப்பிட்டியில் குண்டல கலச சங்காபிஷேகம் நாளை



யாழ்ப்பாணம், ஜூலை19

உடுப்பிட்டி, இமையாணன் விஸ்வகுல விநாயகர் ஆலயத்தில் நாளை ஞாயிற் றுக்கிழமை 1008 குண்டல கலச சங்காபிஷேகம் இடம் பெறவுள்ளது.

கடந்த மாதம் 6ஆம் திகதி இடம்பெற்ற மகாகும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து நடை பெற்று வந்த மண்டலாபிஷேகப் பூர்த்தி தினமான நாளை சங்காபிஷேகம் இடம் பெறவுள்ளது.

சங்காபிஷேகத்தைத் தொடர்ந்து 'விஸ்வகுல விநாயகர் பெருமை' என்றும் மலர் வெளியீட்டு நிகழ்வு இடம்பெறும்.

அதன் பின் மாலை 6 மணிக்கு வசந்த மண்டப பூசை இடம் பெற்று விநாயகர் வீதிவலம் வருவார். கும்பாபிஷேக நிகழ்வின் போது எடுக்கப்பட்ட படத்தை மேலே காணலாம்.

## திருநாவுக்கரசு மா.வி அதிபருக்கு மணிவிழா

யாழ்ப்பாணம், ஜூலை19

கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலய அதிபர் தம்பு கந்தையாவின் மணி விழா நிகழ்வுகள் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

வித்தியாலயத்தின் பிரதி அதிபர் திருமதி செ.ஜெகநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பாராட்டுரைகள், கௌரவிப்பு என்பன இடம்பெறவுள்ளன. (01)

## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 19

உரும்பிராய் கிழக்கு காந்திஜி சனசமூக நிலைய முன்பள்ளியின் விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நிலைய மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

நிலையத் தலைவர் த.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை செஞ்சிலுவைச் சங்க வடக்கு - கிழக்கு இணைப்பாளர் கு.பாலகிருஷ்ணன் கலந்து கொள்வார். (1)


## NOTICE

The Opening ceremony of the Children's Park Teching Hospital, Jaffna will be held on 20th Sunday July 2008, at 10.00 am not on 21st Monday as planed earlier. Sorry for the inconvenience.

Thank you.

*Director and Paediatrcian team*

## Oriendal Aquarium
விற்பனைக்கு

சகலவிதமான வளர்ப்பு கலர் மீன்களும், மீன் தொட்டி உபகரணங்களும் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: மல்ரிபாம், 61, இராமநாதன் றோட், (நாச்சிமார் கோயில் முன்றோட்) யாழ்ப்பாணம்.

## தேவை

எமது நிறுவனத்திற்கு கணனி அறிவுடைய (Word, Excel) அனுபவ முள்ள பெண் பிள்ளைகள் தேவை. தொடர்பு:

**NEW GOLDEN STAR**
226, Ramanathan Road,
Thirunelvely. T.P: 0774011254

## விற்பனைக்கு

இருவெளி யன்னல் நிலைகள் கிறிலுடனும் 3'x7' கதவு நிலைகள் என்பன விற்பனைக்கு உண்டு.

தொடர்: றொனி
தொலைபேசி இல: 0212225901


## கண்ணீர் அஞ்சலி

வடமராட்சி வலய அழகியல் உதவிக் கல்விப்பணிப்பாளர்
செல்வி இன்பமலர் அவர்களின் தந்தை

### வைத்திலிங்கம் பரமலிங்கம்

அவர்களின் பிரிவுச் செய்தி அறிந்து அதிர்ச்சியும், ஆழ்ந்த கவலையும் அடைந்துள்ளோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்து அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வடமராட்சி நடன ஆசிரியைகள்.

## கண்ணீர் அஞ்சலி



கனடாவில் காலமான எமது குடும்ப உறவினர்

### அமரர் தம்பிமுத்து செல்லப்பா (அப்பர்)

அவர்களின் பிரிவுச் செய்தி அறிந்து அதிர்ச்சியும், ஆழ்ந்த கவலையும் அடைந்துள்ளோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்து அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சி.சத்தியநாதன்
(மைத்துனர் குடும்பம்).

*காரைநகர் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (#/553812)

## துயர்பகிர்கின்றோம்



எமது பாடசாலை அதிபர்
திருமதி செல்வமலர் சுந்தரேசன்
அவர்களின் தந்தை

### ஆறுமுகம் வைத்திலிங்கம் பரமலிங்கம்

*(கட்டட ஒப்பந்தகாரர்)*

அவர்கள் 18.07.2008 அன்று இறைபத மெய்தியமையிட்டு துயரடைந்திருக்கும் அதிபருக்கும், அன்னாரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அமரரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதி அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்
யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுத் துறையை மேலும் வளர்த்தெடுப்பதற்கு சரியான திட்டமிடல், சிறந்த முகாமைத்துவம் அவசியம்

யாழ்.மாவட்டத்தில் விளையாட்டுத் துறை இன்று பெரும் வளர்ச்சி பெற்று வருகின்றது. விளையாட்டும் இப்போது தொழில்சார் கல்வியாக மாறியதையடுத்து இந்த வளர்ச்சி வேகம் கொண் டுள்ளது. இந் நிலையில் விளையாட்டுத் துறையின் வளர்ச்சியில் விளையாட் டுத் துறை சார்ந்த அதிகாரிகளின் பங்களிப்பு, முகாமைத் துவம், திட்டமிடல், தீர்மானம் செய்தல் போன்ற விடயங்கள் பலவீன மானதாகவும் திருப்தியற்றதாகவும் காணப் படுகின்றமை விளையாட்டுத்துறையின் வளர்ச்சியில்சில பின்னடைவுகளை ஏற்படுத் துகின்றன.

பல்வேறு நெருக்கடிகள், பிரச்சினைக ளுக்கு முகம்கொடுத்து வளர்ந்துவரும் எமது எதிர்கால சந்ததியை உரிய முறையில் வழிப்படுத்த வேண்டும் என்ற நல்ல நோக் கிலேயே நாம் இதனை இங்கு குறிப்பிடு கின்றோம்.

அண்மையில் பாடசாலைகளுக்கு இடை யேயான மாகாண மட்டப் போட்டிகளில் கலந்து கொள்வதற்கு திருமலை சென்ற வர்கள் போட்டி நடைபெறாமல் திரும்பி வந்தார்கள். இதேபோன்று அண்மையில் அம்பாந்தோட்டை, பெலியத்தையில் இடம் பெறும் போட்டிகளில் கலந்து கொள்வதற்கு பிரதேச செயலாளர், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் ரீதியாகப் பெயர்கள் சேகரிக்கப்பட்டு இறுதியில் குறிப்பிட்ட சிலர் அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்கள்.

இந்த நடவடிக்கைகளால் வீரர்கள் மத்தியில் பலத்த விமர்சனங்கள் எழுந்துள் ளன. குறிப்பாக கடந்தாண்டு தேசியப் போட் டிகளில் கலந்து கொண்டவர்களுடன் ஒரு சிலர் சேர்த்துக் கொள்ளப்படாமல் புறக்க ணிக்கப்பட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டது.

இந்தக் குற்றச்சாட்டு நியயமானதா? இல்லையா என்று குறித்து விவாதிக்க நாம் விரும்பவில்லை.

இத்தகைய நிலைமை ஏற்படக் காரணம் அதிகாரிகளின் சரியான முகாமைத்துவ மின்மையும் சிறந்த திட்டமிடல் இல்லா மையுமே. இதற்கு சம்பந்தப்பட்டவர்கள் காரண, காரியங்களைக் கற்பிக்கலாம். விட்ட தவறுக்கு நியாயம் கற்பிப்பதே இன்று பல அதிகாரிகளின் பழக்கமாக மாறியுள்ளது. யாரும் அதனைத் தவறு என்று ஒப்புக் கொண்டது கிடையாது.

கடந்த வருடம் போட்டிகளில் கலந்து கொள்வதற்கு தெரிவு செய்யப்பட்ட வர்களில் ஒரு சிலர் போட்டிகளில் கலந்து கொள்ளச் செல்லாத நிலைமையும் ஏற்பட் டது. மேலும் மாவட்ட மட்டத்திலான தடகளப் போட்டிகள் இடம் பெறவில்லை. மாகாண மட்டப் போட்டிகளும் இடம் பெறவில்லை. தேசிய மட்டத்திற்கு யாழ் வீரர்கள், வீராங்கனைகள் கொண்டு செல்லப் பட்டார்கள்.

இவர்கள் பெறுபேறுகளின் அடிப்படை யில் கொண்டு செல்லப்படுவதாக அறிவிக் கப்பட்டது. இந்த திறமை என்ற விடயம் ஏற்கனவே நாம் குறிப்பிட்டதைப் போன்று உரிய திட்டமிடலின் கீழ் ஒழுங்கமைப்பு செய்யப்பட்டு மேற்கொள்ளப்பட்டதா? என்ற கேள்வி அப்போது எழுந்தது. போக்கு வரத்துக்கான அனுமதி விவரம், அடையாள அட்டைகளுக்கான படங்கள் என்பன பெறப்பட்டு இறுதியில் அவர்களைக் கைவிட்டுச் செல்லும் நிலைமை ஏற்பட்டி ருக்கமாட்டாது.

வீரர்களின் விவரங்கள் உரியமுறை யில் பிரதேச செயலர், உதவி அரசாங்க அதிபர் பிரிவு மட்டத்தில் பேணப்பட்டிருந்தால் யாழ். மாவட்ட உதைபந்தாட்ட அணி போட்டிக்கு செல்வதற்கு தமக்கும் வாய்ப்புக் கிடைக்குமா? என்ற எதிர்பார்ப்புடன் உள்ளது.

இதனை உரிய முறையில் தெரியப் படுத்தாமையால் யாழ்.மாவட்ட உதைபந் தாட்ட அணி ஏமாற்றமடைந்துள்ளது.

விளையாட்டு வீரன் வெற்றியையும் தோல்வியையும் சமனாக கருதுபவன்.

## தவறுகளை நியாயப்படுத்துவதிலும் பார்க்க அவை இடம்பெறாமல் தடுப்பதே நல்லது

ஒரே மேசையில் யார் யாரைக் கொண்டு செல்வது எனத் தீர்மானித்திருக்கலாம்.

இத்தகைய பொறுப்பற்ற செயற்பாடுகள் எதிர்காலத்தில் இடம்பெறக்கூடாது. ஊடகங்களை திட்டித் தீர்ப்பது யாருக்கும் பயன் தரமாட்டாது. விமர்சனங்களுக்கு மத்தியில் கடமையாற்றுவது சுடச்சுட மிளிரும் பொன்போல பிரகாசிக்கும் என்பதை உரியவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

அந்த வகையில்தான் இந்த விடயம் சுட்டிக் காட்டப்படுகின்றது. எதிர்காலத் தில் இத்தகைய நிலை ஏற்படக்கூடாது. தேசிய மட்டத்திலான உதைபந்தாட்டப் போட்டிக்கு வடமாகாணம் சார்பில் மன்னார் மாவட்ட அணி அனுப்பப்பட்டு கிழக்கு மாகாணத்துடன் மோதி முதல் சுற்றிலேயே வெளியேறியுள்ளது. இந்த விடயம் அறியாது அதே போன்று உண்மைக்கும் நேர்மைக்கும் தலை வணங் குபவன். எனவே வீரர்கள், வீராங்கனைக ளுக்கு வழிகாட்டுபவர்க ளும், தலைமை தாங்குபவர்களும் இந்த மனநிலையில் இருக்க வேண்டும்.

அதிகாரம் உண்டு என்பதற்காக எதனை யும் செய்யலாம்; நினைத்தவாறு நடக் கலாம் என்ற மனநிலையில் செயற்படு பவர்கள் தங்களது தலையில் தாங்களே மண்ணை அள்ளிப் போட்டுக் கொள்கி றார்கள்.

எனவே உரிய அதிகாரிகள் சரியான திட்டமிடலுடனும், பொறுப்புணர்வுடனும் செயற்பட்டு யாழ்.மாவட்ட விளையாட் டுத்துறை மேலும் வளர்ச்சி பெறுவதற்கு ஒத்துழைக்க வேண்டும் என்பதே அனை வரதும் பெருவிருப்பாகும்.

விண்மணி

# யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான ஆங்கிலதினப் போட்டிகளில் வெற்றி பெற்றோர்

வலி.வடக்கு, ஜூலை 19

யாழ்.மாவட்டப் பாடசாலை அணிக ளுக்கு இடையே இடம்பெற்ற ஆங்கில தினப் போட்டியில் மாவட்ட மட்டத்தில் வெற்றியீட்டிய மாணவர்களின் விவரங் கள் வருமாறு:-

### சொல்வதெழுதல்

***தரம் 6:*** பாலசுப்பிரமணியம் மச்சாயினி (உடுவில் மகளிர் கல்லூரி), கொட்பிரி விஜயராஜா அனற்றொயிவின் (பண்டத் தரிப்பு மகளிர் கல்லூரி), சூரியமூர்த்தி புவித்தா (வடமராட்சி மெதடிஸ்ற் பெண் கள் உயர்தரப் பாடசாலை)

***தரம் 7:*** சேவயர் ஜனுசி (யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலை), பாஸ்கரன் சுலக்ஷனா (வடமராட்சி மெத டிஸ்ற் பெண்கள் உயர்தரப் பாடசாலை), தவப்பிரகாசம் பிரகாஷ் (சாவகச்சேரி இந்துக்கல்லூரி)

***தரம் 8 :*** சோமசேகரம் திலியம்பாசி (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), தேவராசா ஆதிரை (மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்), தனபாலசிங்கம் கோகுலன் (பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி)

***தரம் 9 :*** குலசேகரம் கோனிக்கா (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), செல் வராசா மயூரா (நெல்லியடி மத்திய மகாவித் தியாலயம்), பரமேஸ்வரன் சதுர் வேதன் (யாழ்ப்பாணக் கல்லூரி), அருளானந்தம் ஆரா அமுதன் (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி)

***தரம்10:*** சந்திரதாஸ் சஜீவன் (யாழ்ப் பாணக் கல்லூரி), சேவயர் வைசிலெவிதா (யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர் மடம் பாடசாலை), சிவராஜா கலினா (வடமராட்சி மெதடிஸ்ற் பெண்கள் உயர் தரப் பாடசாலை), தவராசா அனோஜன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), சண்முக நாதன் சர்மி (கொக்குவில் இந்துக் கல்லூரி)

***தரம் 11:*** சிவபாலன் செல்வநித்திலன் (யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி), ரவிச்சந்திரன் சோபனா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), செபஸ்ரியன் அனாலா வன்யா (இளவாலை புனித கன்னியர் மடம் மகா வித்தியாலயம்)

***தரம் 12:*** வாமசிவன் நிஷாந்திகா (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), பரமேஸ்வரன் சிந்துஜா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), சிவாஜி மாதுமை (சுன்னாகம் ஸ்கந்த வரோதயாக் கல்லூரி), இராஜ்மோகன் விதுஜா (உடுவில் மகளிர் கல்லூரி)

***தரம் 13:*** நாகேந்திரன் லக்ஷிகா (சாவ கச்சேரி இந்துக் கல்லூரி), முத்துலிங்கம் அறிவரசி (வேம்படி மகளிர் கல்லூரி), தேவ குருநாதன்டிலானி (உடுவில் மகளிர்கல்லூரி)

### கட்டுரையாக்கம்

***தரம் 6:*** பாலசுப்பிரமணியம் மச்சாயினி (உடுவில் மகளிர் கல்லூரி), பாஸ்கரன் ஆரணி (வடமராட்சி மெதடிஸ் மகளிர் உயர்தரப் பாடசாலை), குலசிங்கம் கௌ சிகா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

***தரம் 7:*** குருபாதம் சலோமி துஸ்யந்தி (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), செந்தூர்ச் செல்வன் விருத்திகா (உடுவில் மகளிர் கல்லூரி), தனபாலசிங்கம் சாமினி (வடமராட்சி மத்தி மகளிர் கல்லூரி)

***தரம் 8:*** பிரகதீஸ்வரன் குணவரன் (யாழ் இந்துக் கல்லூரி), குருபாதம் சரோன் வான்மதி (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), தேவசுதன் காயத்திரி (சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி)

***தரம் 9:*** இளங்குமரன் பார்த்திபன் (யாழ் இந்துக் கல்லூரி), சிவராஜ் தாரணி (சுண் டுக்குளி மகளிர் கல்லூரி), உலகேஸ்வரன் தர்சினி (சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

***தரம் 10:*** சிவாஜி சாம்பவி (உடுவில் மகளிர் கல்லூரி), சண்முகானந்த சர்மா விசாகன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), தர்மராசா பிரியந்தி (வடமராட்சி மெதடிஸ் மகளிர் உயர்தரப் பாடசாலை)

***தரம் 11:*** ரவிச்சந்திரன் சோபனா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), சிவகு மாரன் கோபினாத் (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி), இளங்குமரன் கௌசிகன் (யாழ்ப் பாணம் இந்துக் கல்லூரி)

***தரம் 12:*** வாமசிவன் நிசாந்திகா (வேம் படி மகளிர் உயர்தரப் பாடசாலை), ஸ்ரீமுரு கதாஸ் விசாகன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), சுரேந்திரன் சுபாங்கி (வடமராட்சி மெதடிஸ் மகளிர் உயர்தரப் பாடசாலை)

***தரம் 13:*** முத்துலிங்கம் அறிவரசி (வேம் படி மகளிர் உயர்தரப் பாடசாலை), சேவற் கொடியோன சரணியா (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), நாகேந்திரன் லக்சிகா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

### பார்த்து எழுதுதல்

***தரம் 3:*** இரட்ணேஸ்வரன் சைலஜா (யாழ்ப் பாணம் கல்லூரி), பார்த்தீபன் காருண்யா (யாழ். புனித யோன்பொஸ்கோ வித்தியாலயம்), சுசந்தகுார் அனுசன் (யாழ்ப்பாணக் கல்லூரி)

***தரம் 4:*** சேயோன் அபிநயா (யாழ்ப் பாணக் கல்லூரி), பீற்றர் லோறட்ஸ் கிலாறா (யாழ் புனித ஜோன்பொஸ்கோ வித்தி யாலயம்), ரவீந்திரன் தர்சனா (மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி)

***தரம் 5:*** தர்மராஜா லக்சிகா (யாழ் இந்து ஆரம்ப பாடசாலை), விஜயதாசன் மதனிகா (மீசாலை வீரசிங்கம் மகாவித்தி யாலயம்), சேகரன் ஸ்ரேலின்ராஜ் (அளவெட்டி அரு ணோதயாக் கல்லூரி)

***தரம் 6:*** வள்ளிநாதன் லோஜினி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), திருக் குமரன் நிலக்ஷிகா (யாழ்ப்பாணக் கல்லூரி), சூரியமூர்த்தி புவித்தா (வடமராட்சி மெதடிஸ் மகளிர் உயர்தரப் பாடசாலை)

***தரம்7:*** டொனால்ட் விக்கிரமராஜா மேரி திவோசா (யாழ் புனித திருக்குடும்ப கன் னியர் மடம் பாடசாலை), ஸ்ரீ பாஸ்கரன் சிந்துஜா (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி), கணேஸ்வரன் சாம்பவி (யாழ்ப்பாணக் கல்லூரி)

***தரம் 8:*** சிவபாதம் டிலக்ஷனா (நாவற் குழி மகா வித்தியாலயம்), சிவசந்திரபோஸ் சகிஸ்மனா (வடமராமட்சி மகளிர் உயர்தரப் பாடசாலை), சிவபாதசுந்தரம் சிவபிரியா (ஆவரங்கால் நடராசா இராமலிங்கம் வித்தியாலயம்)

***தரம் 9:*** ஸ்ரீஸ்குமார் சாகிர்த்தியா (நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்), பிறேமதாஸ் டிலானி (யாழ்ப்பாணக் கல்லூரி), குலசேகரம் மௌனிகா (வரமராட்சி மத்திய மகளிர் கல்லூரி)

***தரம்10:*** சந்திரஸ்ரீ சங்கீதா (சுண்டுக்குழி மகளிர் கல்லூரி), ஞானகுருநாதன் கீர்த் திகா (தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி), சிவதாசன் சிவதர்சா (வடமராட்சி மெதடிஸ் மகளிர் கல்லூரி), பரமேஸ்வரன் வானதி (மானிப்பாய் மகளிர் கல்லூரி)

***தரம் 11:*** பரம்சாமி நிலாணி (வண்ணை நாவலர் வித்தியாலயம்), கணேசலிங்கம் ஜனித்தா (பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி), அன்ரன் விஜயகுமார் வின்சி ஜோஸ்துஷா (யாழ் சென்பற்றிக்ஸ் கல்லூரி)

தரம் 12: பிரதாபன் லக்ஷி (உடுவில் மகளிர் கல்லூரி), குகநாதன் குணதீபன் (யாழ் இந்துக் கல்லூரி), ஞானேந்திரன் தேவகி (வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி)

தரம் 13: சடாச்சரம் சாமரை (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), மரியதாஸ் கெலன் சோபியா (அச்சுவேலி சென்தி ரோசா மகளிர் கல்லூரி), செந்தில்வேல் தர்சியா (வடமராட்சி மெதடிஸ் பெண்கள் உயர்தரப் பாடசாலை) (202-86)



சாவகச்சேரி [illegible] முத்துமாரி அம்மன் ஆலயத்தில் நடைபெற்ற கும்பாபிஷேகக் கிரியைகளின்போது எடுக்கப்பட்ட காட்சிகள் சில. (207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக் கடற்படையின் தாக்குதலைக் கண்டித்து தமிழகம் முழுவதும் இன்று உண்ணாவிரதப் போர்!

## தமிழக அரசு ஏற்பாடு மத்திய அரசின் கவனத்தை ஈர்க்கவும்

சென்னை, ஜூலை 19

இலங்கைக் கடற்படையால் தமிழக னவர்கள் தாக்கப்படுவதைக் கண்டித்து ாவட்டத் தலைநகரங்களிலும், கடலோர கரங்களிலும் இன்று (சனிக்கிழமை) .மு.க. சார்பில் உண்ணாவிரதப் போராட்டம் டக்கிறது. இதில் மு.க.ஸ்டாலின் உட்பட மைச்சர்களும் தலைவர்களும் கலந்து காள்கிறார்கள்.

தி.மு.கவின் உயர்நிலை செயற்திட்டக் ழுவின் அவசரக் கூட்டம் சென்னை றிவாலயத்தில் நேற்றுமுன்தினம் நடந்தது.

தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற் டையினர் நடத்தும் தாக்குதலை உடனடி ாக நிறுத்தவும், தடுக்கவும் மத்திய அரசு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை மற்றும் தமிழகத்தில் அதற்கான கண்டனத்தைத் தெரிவிப்பது ஆகியவை பற்றித் தீர்மானிப்ப தற்காக இந்தக் கூட்டம் நடத்தப்பட்டது.

முதலமைச்சர் கருணாநிதி தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்தில் மத்திய அமைச்சர் டி.ஆர்.பாலு, கனிமொழி எம்.பி., அமைச்சர் கள் அன்பழகன், ஆற்காடு வீராசாமி, மு.க. ஸ்டாலின், துரைமுருகன், பொன்முடி உட் படப் பலர் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் கூறப்பட்டிருப்பவை வருமாறு:-

இந்தியக் கடல் எல்லைக்குள் தமிழக மீன வர்கள் மீன்பிடிக்கும்போது இலங்கைக் கடற் படையினரால் அடிக்கடி கண்மூடித்தனமாக் கொல்லப்படுவதும், தேவையற்ற முறையில் கைதுசெய்யப்படுவதும் தொடர்ந்து நடந்து வருகின்றன.

மனித உரிமை மீறல்களையும், கடல் எல் லைக்குள் மீன்பிடிக்கும் உரிமைகளையும் சட்ட விரோதமாகத் தடுத்து, நாள்தோறும் தமிழக மீனவர்களுக்குப் பல்வேறு இன்னல் களை இலங்கைக் கடற்படை ஏற்படுத்தி வருகிறது.

இந்தச் செயல்களால் ஆழ்ந்த வேதனை யுற்ற தி.மு.க. தலைவரும், முதலமைச்சரு மான கருணாநிதி, இவ்வித அத்துமீறல் நடவடிக்கைகளை உடனடியாகத் தடுத்து நிறுத்த இலங்கை அரசை வலியுறுத்த வேண்டும் என்று மத்திய அரசின் கவனத் திற்கு பலமுறை எடுத்துச் சென்றுள்ளார்.

மேலும், தி.மு.க. பொருளாளர் அமைச்சர் ஆற்காடு வீராசாமி, துணைப் பொதுச் செயலாளர் அமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆகி யோர் தலைமையில் ஒரு குழு, சென்னை யில் உள்ள இலங்கைக்கான தென்னிந்தியத் துணைத் தூதரைச் சந்தித்தது. தமிழக மீன வர்கள் மீதான துப்பாக்கிச் சூடுகளையும், அத் துமீறல்களையும் கண்டித்து, இந்தச் செயல் கள் உடனடியாகத் தடுக்கப்படவேண்டும் என்று 12.03.2007 அன்று வலியுறுத்தியது.

இலங்கைத் துணைத் தூதர் இதுபோன்ற நிகழ்வுகள் நடைபெறாது என்று இக்குழு விடம் உறுதி அளித்தார். இருந்தாலும், தமி ழக மீனவர்களைத் துப்பாக்கியால் சுட் டுக்கொல்வதும், கைது செய்வதும் தொடர்ந்து நடக்கின்றன. இந்த ஆண்டு ஜூலை 2 மற் றும் 12ஆம் திகதிகளில் இலங்கைக் கடற் படை 1000 தமிழக மீனவர்களைக் கைது செய்தும், 300 மீன்பிடிப் படகுகளைக் கைப் பற்றியும், அவர்களது உடைமை களைச் சேதப் படுத்தியும் பல அட்டூழியங்களைச் செய்தது.

இவை தமிழக மீனவர்கள் மனதில் நீங் காத அச்சத்தையும், இதன் காரணமாக அவர் கள் மீன்பிடிக்கும் தொழிலை மேற் கொள் வதற்கு பெரும் தடையையும் ஏற்ப டுத்தி மீனவர்களின் ஒரே வாழ்வாதாரத்தை அழித்து வருகிறது.

உடனடியாக இலங்கைத் தூதரை அழைத்து, தமிழக மீனவர்கள் கொல்லப்படுவதையும், தாக்கப்படுவதையும் கண்டிப்பான முறை யில் குறிப்பிட்டு, கண்டனத்தையும் வருத் தத்தையும் தெரிவிக்க வேண்டும். எதிர் காலத்தில் இதுபோன்ற செயல்கள் தொட ராமல் இருப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

நடக்க இருக்கும் சார்க் மாநாட்டில் பிர தமர் கலந்துகொள்ளும்போது, இந்தியாவின் கவலையையும், வருத்தத்தையும் இலங்கை ஜனாதிபதியிடம் தெரிவித்து, இதுபோன்ற தாக்குதல்கள் நடக்காமல் தடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறோம். இயல்பான நிலையையும் அமைதியான சூழலையும் உறுதி செய்யவேண்டும்.

மேற்கூறப்பட்ட இந்தத் தீர்மானங்களை வலியுறுத்துவதற்காகவும், மத்திய அரசின் கவனத்துக்குக் கொண்டுவருவத்தற்காகவும் காலை 8 மணி முதல் 5 மணிவரை மாநிலம் முழுவதும் கடற்கரையோர நகரங்களிலும், ஊர்களிலும், மாவட்டத் தலைநகரங்களிலும் ஒருநாள் உண்ணாவிரதம் மேற்கொள்ளப் படும்.- இவ்வாறு அதில் கூறப்பட்டிருந்தது.

## வாசகர் திருமுகம்

### தரைக்கீழ் நீர் வளத்தைப் பெருக்குவதின் அவசியம்

''யாழ். குடாநாட்டின் தரைக்கீழ் நீர்வளத்தை பெருக்குவதன் மூலம் பாசனத்தை விருத்தி செய்து அபிவிருத்தி காண முனைய வேண்டும்'' என்ற தலையங்கத்தினைக் கொண்ட ஆக்கத்தினை 29.06.2008 திகதிய தங்களது நாளேட்டில் கண்டேன். படித்தேன். மிக்க மகிழ்ச்சி அடைந்தேன்.

இன்றைய அரசியல்-பொருளாதார சூழ்நிலையில் மேற்படி ஆக்கத்தில் தெரிவிக் கப்பட்டுள்ள தகவல்கள், கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ள சிபாரிசுகள் யாழ். குடா நாட்டின் விவசாய முயற்சியின் மேம்பாட்டின் எதிர்கால நடவடிக்கைகளுக்கு உதவிக் கரம் நீட்டக்கூடிய நிலையிலுள்ள அமைப்புக்களின், அதிகாரிகளின் கவனத்தை ஈர்த்தி ருக்கும் என நான் நம்புகிறேன். எதிர்பார்க்கின்றேன்.

சர்வதேச அரச சாரா அமைப்புக்களின் நிதி உதவி அருகிவரும் சந்தர்ப்பம் நிலவும் கால கட்டத்தில் நாம் தற்பொழுது உள்ளோம். இச் சந்தர்ப்பத்தில் எமது மூல வளக்கங்களைப் பேணி பாதுகாப்பது எமது தலையாய கடமையாகும். எமது பெரும்பான்மை விவசாய மக்களின் மூலாதார ''நிலத்தடி நீர் பாவனை முறையிலான நீர்ப்பாசன விவசாய வீருத்தியை'' குறிக்கோளாகக் கொண்டு விவசாய பொருளாதார முயற்சிகள் இனங்காணப்பட்டுச் செயற்படுத்தப்பட வேண்டியது இன்றைய தேவையாக உள்ளது.

பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் அவர்களின் மேற்படி ஆக்கம் இத்தகைய கோணத்தில் நோக்கப்பட்டு, ஆராயப்பட்டு நடைமுறைக்கு உட்படுத்தப்பட வேண்டிய தொன் றாகும். இங்ஙனம் செயற்பட்டால்தான் நாம் எதிர்பார்க்கும் (கனாக்காணும்) பேண்தகு அல்லது நிலைத்து நிற்கும் விவசாய-பொருளாதார அபிவிருத்தியை நோக்கி நாம் நடைபோட முடியும்.

'பேண்தகு விவசாய-பொருளாதார அபிவிருத்தி' என இங்கே குறிப்பிடுவது தனியே பயிர்ச் செய்கை மேம்பாட்டிற்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டது அல்ல. பயிர்ச் செய்கையுடன் இணைந்த நீர் முகாமைத்துவம், நில வள விருத்தி, விலங்கு வேளாண்மை, ஒருங்கிணைந்த விவசாய முயற்சி, சேதனபசளைப் பாவனை, உற்பத்திப் பொருள்களைச் சந்தைப் படுத்தல், 'கழிவு பொருள்களை பாவனைக்கு மீட்டல், மழை நீர் சேகரித்தல் போன்ற பல்வேறு சம்பந் தப்பட்ட அம்சங்களையும் கருத்திற்கொண்டு செயற்படுவதைச் சுட்டி நிற்கின்றது.

*முன்னாள் பிரதி விவசாயப் பணிப்பாளர்*
*(வடக்கு-கிழக்கு மாகாணம்)*

**S.T. பத்மநாதன்**

### துன்புறும் மணற்காட்டு மக்கள் துயர் துடைப்பார் யார்?

மணற்காடு மக்களாகிய நாம் 26.12.2004 ஆழிப்பேரலையின் தாக்கத்தினாலே யாழ். மாவட்டத்திலேயே பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள். இயற்கையின் சீற்றத்தினாலே ஊர் இழந்து, உறவிழந்து, உடைமைகள் முழுவதும் இழந்து தற்பொழுது சுனாமி அகதிகளாக மட்டுமல்ல போரின் அகதிகளாகவும் சிறிய கூடாரங்களிலே வாழ்த்து கொண்டிருக்கின்றோம். காலத்துக்குக் காலம், வாழும் இந்த தற்காலிக முகாமிலே, வெள்ளத்தினாலும், கடும் வரட்சியினாலும், காற்றோடு கூடிய மணல் அரிப்பினாலும், இயற்கையோடு போராடிக் கொண்டி ருக்கின்றோம். தொழில் வாய்ப்பின்றியும், கடற்தொழிலைத் தவிர வேறு தொழிலை செய்ய முடியாத பொருளாதார ரீதியில் மிகவும் துன்பப்படுகிறோம்.

பங்குத்தந்தையின் கடும் முயற்சியினாலே எம்முடைய தற்காலிக முகாமிற்கு 27.10.2006 திறிபேஸ் மின் வநியோகம் செய்யப்பட்டது. மக்களிடம் இருந்து கொஞ்சம் கொஞ்சமாக சேர்த்த பணத்தைக் கொண்டு இதுவரை காலமும் மின் கட்டணத்தைச் செலுத்தினோம். பொருளாதார ரீதியில் இதற்கு ஈடுகொடுக்க முடியாமல் பல தட வைகள் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபரையும், பிறகு யாழ். அரச அதிபரையும் கடிதம் மூலமும், நேரடியாக சந்தித்தும், எம்முடைய நிலையை எடுத்துரைத்தோம். அவர்களும் மின்சாரம் சம்பந்தமான பிரச்சினைகளை உடன் தீர்ப்பதாக பல தடவைகள் உறுதி மொழி அளித் தார்கள். இருந்தும் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளாமல் பல மாதங்கள் கடந்துவிட்டன.

இந் நிலையில் எம் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் நோக்கோடு சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை கௌரவ அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்களை 05.06.2008 மு.ப. 11 மணிக்கு சந்தித்து எம்முடைய பிரச்சினைகளை எடுத்துரைத் தோம். அதற்கு அமைச்சர், செலுத்த வேண்டிய மின் கட்டணம் தொடர்பாகவும், இனி வரும் காலத்தில் இலவச மின்சாரம் பெற்றுக் கொடுக்க வேண்டும் எனவும் அரச அதிகாரிகளுக்கு உடன் பணிப்புரை விடுத்தார். ஊடகங்களிலும் இதைப்பற்றிய அறிவித் தல்கள் வெளிப்படுத்தப்பட்டன. இன்று ஒரு மாதம் கடந்தும் அதன் பிரதி பலன் எங்களுக்குக் கிட்டவில்லை. இந் நிலையில் மின்சார சபைக்குக் கட்ட வேண்டிய மின் கட்டணம் 6.37.364 ரூபாய் ஆக உயர்ந்துள்ளது. எனவே நாம் தற்போது இருளில் வாழ வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. மீண்டும் மருதங்கேணி உதவி அரசாங்க அதிப ரையும், அரச அதிபரையும் நேரில் சந்தித்தபோது உறுதிமொழிகளே கிடைத்துள்ளன.

தற்காலிக முகாம் அமைந்துள்ள சூழல் பாம்பு பூச்சிகள் நிறைந்திருப்பதினாலும், இரவு வேளையில் அம்புலன்ஸ் அற்ற நிலையில் பல மைல் தூரம் உயிரைப் பணயம் வைத்து மந்திகை வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை இருப்பதினாலும் ஜி.சீ.ஈ உயர்தர, சாதரணதர, ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சை, இரண்டாம் தவணைப் பரீட்சைகள் (21.07.2008) அண்மையில் இருப்பதினாலும் இருளில் இருக்கும் எம் மக்கள், மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். பிள்ளைகளுடைய கல்வி யும் பின்தள்ளப்பட்டுள்ளது.

எனவே கௌரவ அமைச்சரைச் சந்தித்தும் நத்தை வேகத்தில் நகர்ந்து கொண்டிருக்கும் இப்பிரச்சினையை எவ்வாறு தீர்ப்பது? எப்படித் தீர்ப்பது? இன்னும் யாரிடம் சென்று கேட்பது என்று எம் மக்கள் அங்கலாய்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

*மணற்காடு அ.சங்க நிர்வாகிகள்.*

*மணற்காடு மக்கள் சார்பில்*

## மீனவர் மீதான தாக்குதலைத் தடுக்கக் கோரி நாகபட்டினத்தில் அ.தி.மு.க ஆர்ப்பாட்டம்

சென்னை, ஜூலை 19

இலங்கைக் கடற்படையினர் தமிழக மீன வர்களின் மீது நடத்திவரும் தாக்குதலைத் தடுத்து நிறுத்தக்கோரி நாகப்பட்டினத்தில் அ.தி.மு.க. சார்பில் இன்று (சனிக்கிழமை) ஆர்ப்பாட்டம் நடத்தப்படுகிறது என்று அ.தி. மு.க. பொதுச்செயலாளர் செல்வி ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஜெயலலிதா வெளியிட் டுள்ள அறிக்கையில் கூறியிருப்பவை வருமாறு:-

இலங்கை அரசைத் தட்டிக் கேட்காத மத்திய, மாநில அரசுகளின் மெத்தனப் போக்கைக் கண்டித்தும், இலங்கைக் கடற் படையினரால் சுடப்பட்டு மரணமடைந்த மீனவர்களின் குடும்பங்களுக்குத் தலா 5 லட்சம் ரூபா மற்றும் இவர்களது குடும்பத் தினரின் வாரிசுக்கு கருணை அடிப்படையில் அரசுப் பணி வழங்க வலியுறுத்தியும், அதே போல், காயமடைந்தவர்களுக்குத் தேவை யான உயர்தர சிகிச்சை மற்றும் நிவாரண உதவிகள் வழங்க வலியுறுத்தியும், அ.தி. மு.க. நாகப் பட்டினம் மாவட்டத்தின் சார்பில், இன்று (19ஆம் திகதி) காலை 10.30 மணி யளவில், நாகபட்டினம் பஸ் நிலையம் மற் றும் நீதி மன்றத்திற்கு முன்பு உள்ள அவுரித் திடலில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் - என்று உள்ளது. (சி)

## ஜி.சீ.ஈ மாணவர்களுக்கு வழிகாட்டல் பரீட்சை

யாழ்பாணம், ஜூலை19

சுன்னாகம் ஐயனார் கோவிலடியைச் சேர்ந்த ஐயனார் சனசமூக நிலையமும், ஐயனார் இளைஞர் கழகத்தினரும் இணைந்து உடுவில், தெல்லிப்பளை பிரதேசங்களைச் சேர்ந்த 10 பாடசாலைகளைச் சேர்ந்த 600 கும் மேற்பட்ட மாணவர்களுக்கு ஜி.சீ.ஈ சாதாரணதர வழி காட்டல்ப் பரீட்சை யினை நடத்தவுள் ளன. இரண்டாவது கணிதபாட வழிகாட் டல் பரீட்சை நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு மல்லாகம் மகா வித்தி யாலயத்தில் கரித் தாஸ் கியூ டெக் நிறு வன சிறுவர் நிகழ்ச் சித்திட்ட முகாமை யாளர் அஜந்தன் தலைமையில் ஆரம்பமாக உள்ளது.

இந்த பரீட்சை பிரதான பாடசாலைக் கான யூனியன் கல்லூரி, இராமநாதன் கல்லூரி, ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, மல்லாகம் மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் மண்டபங்களில் நடை பெற உள்ளது. (202)

### கருத்தரங்குகள்

ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சைக்குத் தோற் றவுள்ள கலைப் பிரிவு மாணவர்களுக்கான கருத்தரங்குகள் மானிப்பாய் மகளிர் கல்லூரியில் நடை பெறவுள்ளன.

21 ஆம் திகதி தமிழ், 22 ஆம் திகதி இந்துநாகரீகம், 23 ஆம் திகதி புவியி யல், 24 ஆம் திகதி பொருளியல் ஆகிய பாடங்களுக்கு கருத் தரங்குகள் நடை பெறவுள்ளன.


**UNIVERSITY OF JAFFNA, SRILANKA**
**FACULTY OF MEDICINE**
**ACADEMIC PROGRAMME**

The Academic Programme for the New Batch (31st 2008) will commence on 25th August 2008

The date of commencement of the 5th term for the 30th batch (2007) has been postponed to 25th August 2008.

**Registrar**
**University of Jaffna**
**2008.07.18**

**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**
**FACULTY OF MEDICINE**
**Academic Programme- Allied Health Science**

The Academic Programme for the 2nd(2006/2007) Batches of Allied Health Sciences (Bachelor of Science in Nursing, Bachelor of Science in Medical Laboratory Science and Bachelor of Pharmacy) will Commence on 1st September 2008

Registrar,
University of Jaffna.
2008/07/18

(C/553808)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.பாடசாலைகளுக்கு நான்கு வருடங்களாக இரசாயனப் பொருள்கள் அனுப்பப்படவில்லை

## மாகாணச் செயலரிடம் வலயக் கல்விப்பணிப்பாளர்கள் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,ஜூலை19

யாழ்.மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளின் விஞ்ஞான ஆய்வுகூடங்களுக்கு 2004ஆம் ஆண்டுக்குப் பின்னர் இரசாயனப் பொருள்கள் அனுப்பிவைக்கப்படவில்லை. இவை இல்லாமையால் மாணவர்கள் ஆய்வுகூடச் செயற்பாடுகளில் ஈடுபட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே கல்வி அமைச்சுடன் தொடர்புகொண்டு அந்த இரசாயனப் பொருள்களை பாடசாலைகளுக்கு கிடைக்க ஆவனசெய்ய வேண்டும்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள 5 வலயங்களினதும் கல்விப்பணிப்பாளர்கள் வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவனிடம் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில், கல்வித்துறையினர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் கல்வி அமைச்சின் செயலாளர் ஆகியோருடன்யாழ்.பிராந்திய ஆணையாளர் அலுவலக 'வீடியோ' மாநாட்டு அறையில் இருந்து இடம்பெற்ற 'வீடியோ' மூலமான கலந்துரையாடலிலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்தக் கலந்துரையாடலின்போது யாழ். வலயங்களின் கல்விப்பணிப்பாளர்கள் முன்வைத்த கோரிக்கைகள் வருமாறு:-

* பாடசாலைகளின் விஞ்ஞான ஆய்வுகூடங்கள் எவற்றிலும் இரசாயனப் பொருள்கள் இல்லை. 2004ஆம் ஆண்டுக்குப் பின்னர் அவை கிடைக்கப்பெறவில்லை. இதனால் மாணவர்களின் ஆய்வுகூடச் செயற்பாடுகள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளன. எனவே இந்தப் பிரச்சினைக்குக் கல்வி அமைச்சுடன் தொடர்புகொண்டு இரசாயனப் பதார்த்தங்கள் விரைவில் கிடைக்க வழிசெய்யவேண்டும்.

* உலக வங்கியினால் கடந்த வருடம் 55 பாடசாலைகளுக்கு கணனிகள் வழங்கப்பட்டன. மேலும் 20 பாடசாலைகளுக்கு கணனிகள் வழங்கப்படும் என அப்போது உறுதியளிக்கப்பட்டது. எனினும் இதுவரை அந்தக் கணனிகள் கிடைக்கப் பெறவில்லை. அவை கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

* பாடசாலைகளில் அதிபர்கள் ஓய்வு பெற்றவுடன் பதில்அதிபர்கள் நியமிக்கப்படவேண்டும். இந்தப் பதில் அதிபர்கள் நியமனத்தில் மாகாண சபை தாமதம் காட்டுவதால் பாடசாலைகள் அதிபர்கள் இல்லாமல் இருக்கவேண்டிய நிலை ஏற்படுகின்றது. அத்துடன் ஓய்வுபெறும் அதிபர் தனது பொறுப்புகளை ஒப்படைக்கமுடியாத நிலையில் உள்ளார். இந்த நியமனத்தில் உள்ள காலதாமதத்தைத் தவிர்க்கவேண்டும்.

* பாடசாலைகளில் சுகாதார ஊழியர்கள், காவலாளி பதவிகளில் உள்ளவர்கள் ஓய்வு பெறும்போது புதியவர்களை நியமிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. இதனால் பல பாடசாலைகள் சிரமங்களை எதிர்கொள்கின்றன.

எனவே மாகாண சபை அதிகாரிகள் இந்த விடயங்களை கவனத்தில்கொண்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். (50)

## நவாலி ம.வி.யின் மாணவர்களுக்கு வேர்ள்ட் விஷன் உதவி

யாழ்ப்பாணம்,ஜூலை19

நவாலி மகாவித்தியாலயத்தில் கல்வி பயிலும் வறுமைக்கோட்டிற்குட்பட்ட 61 மாணவர்களுக்கு 'வேர்ள்ட் விஷன்' நிறுவனம் சப்பாத்துகளை வழங்கியுள்ளது.

வறிய மாணவர்களின் கல்வி அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் இந்த உதவி வழங்கப்பட்டுள்ளதாக வித்தியாலய அதிபர் இரா. வசந்தகுமார் தெரிவித்தார். (202-95)

## சாவகச்சேரி வைத்தியசாலையில் வெள்ளிக்கிழமைகளில் பிரெஞ்சு மருத்துவரின் சேவை

யாழ்ப்பாணம்,ஜூலை19

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் பிரெஞ்சு மருத்துவக் குழுவைச் சேர்ந்த சத்திர சிகிச்சை நிபுணரின் வைத்திய சேவை நடைபெறும்.

அடுத்த வாரம் தொடக்கம் பிரதி வெள்ளிக்கிழமைகளில் மேற்படி நிபுணரின் சேவை இடம்பெறும் என யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார். (202)

## நாவலர் சனசமூக நிலையத்தின் பொன்விழாவையொட்டி போட்டிகள்

கரவெட்டி,ஜூலை19

புலோலி மேற்கு திருநாவலூர் நாவலர் சனசமூக நிலையத்தின் பொன்விழாவை முன்னிட்டு பல்வேறு போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

வடமராட்சி வலயப் பாடசாலை மாணவர்களிடையே பேச்சு, மனனம், பண்ணிசை, பொது அறிவு, சதுரங்கம் ஆகிய போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

மாவட்ட ரீதியாகத் திறந்த பிரிவில் கட்டுரை, கவிதை ஆகிய போட்டிகளும் - வடமராட்சியில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையே 20/20 கிரிக்கெட் சுற்றுப்போட்டியும் நடத்தப்படவுள்ளன.

இப்போட்டிகள் அனைத்தும் அடுத்த மாதம் முதல் வாரமளவில் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகளில் பங்குபற்ற விரும்புபவர்கள் மேலதிக விவரங்களை நிலையத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (202-70)

## யாழ்.மாவட்ட வாக்காளர் இடாப்பு பதிவுப் பணிகள் 23ஆம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூலை19

யாழ்.மாவட்டத்தில் வாக்காளர் இடாப்பில் பெயர் பதிவுசெய்யும் பணிகள் எதிர்வரும் 23ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளதாக யாழ்ப்பாணம் தேர்தல் திணைக்கள வட்டாரம் தெரிவித்தது.

2007ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்புகளைப் பிரதேச செயலகங்கள், உள்ளூராட்சி மன்றங்கள், கிராம அலுவலர் அலுவலகங்கள் மற்றும் யாழ்.செயலகம் ஆகிய இடங்களில் பார்வையிடமுடியும்.


கடந்த காலங்களைப் போன்று இம்முறையும் விசேட திட்டத்தின்கீழ் வாக்காளர்களை இணைக்கவும், நீக்கவும் மட்டுமே நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இது தொடர்பான பயிற்சிகள், விளக்கங்களைப் பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்குத் தேர்தல் அலுவலக அதிகாரிகள் நேரில் சென்று வழங்கிவருகின்றார்கள்.

இதேவேளை, வாக்காளர் இடாப்பு பதியும் விடயம் சம்பந்தமாக எந்தவொரு பொதுமகனையும் அலைக்கழிக்க வேண்டாம் எனவும் கிராம அலுவலர்களுக்கு வலியுறுத்தப்பட்டுள்ளது.

31.06.2008இல் 18 வயதைப் பூர்த்தி செய்தவர்கள் தமது பெயர்களை கிராம அலுவலர் அலுவலங்களுக்குச் சென்று உரிய படிவங்களைப் பூர்த்திசெய்வதன்மூலம் இணைத்துக்கொள்ளமுடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் காலத்தில் இடம்பெறும் தேர்தல்களில் வாக்களிப்பதற்கு தேசிய அடையாள அட்டை முக்கியம் என்பதும் இங்கு சுட்டிக்காட்டக்கூடியதாகும். (202-68)



கிளறீசியன் சபையின் ஸ்தாபகர் தூய கிளாரட்டின் பிறப்பின் 200ஆவது அகவையையொட்டி 'வார்த்தை' என்னும் கிறிஸ்தவ ஒலி, ஒளி இறுவட்டு வெளியீடு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை சுண்டிக்குழியில் அமைந்துள்ள கிளரீட் அகத்தில் நடைபெற்றது. இதில் கிளறீசியன் சபையின் யாழ்.மறை மாவட்ட இயக்குநர் அருட்திரு.அல்பேட் ஜோ.அருள்ராஜாவிடமிருந்து இறுவட்டின் முதல்பிரதியை யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயம் ஆண்டகை பெற்றுக்கொள்வதையும் நிகழ்வில் கலந்துகொண்ட பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், அருட்சகோதரிகளையும் படங்களில் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)




## 'கல்வி எமது பிறப்புரிமை' நாடகம் மேடையேற்றம்

சுழிபுரம்,ஜூலை19

தீவக வலய விசேட கல்விப் பிரிவின் ஏற்பாட்டில் இன்று சனிக்கிழமை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் 'கல்வி எமது பிறப்புரிமை' என்னும் நாடகம் மேடையேற்றப்படவுள்ளது.

மேற்படி கல்லூரி மாணவர்களே இந்த நாடகத்தில் நடிக்கவுள்ளனர். (202-267)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜூலை19

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ்ப்பாணப் பாடசாலைகளின் 15 வயதுப் பிரிவினிடையே நடத்தப்பட்டுவரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டங்களின் விவரங்கள் வருமாறு:

* ***யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானம்*** - யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி எதிர் கொக்குவில் இந்துக் கல்லூரி.

* ***சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானம்*** - யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி எதிர் அரியாலை கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்.

* ***தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானம்*** - கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி எதிர் மகாஜனக் கல்லூரி.

* ***பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானம்*** - ஹாட்லிக் கல்லூரி எதிர் உடுப்பிட்டி அமெ ரிக்கன் மிஷன் கல்லூரி.

* ***சுன்னாகம் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானம்*** - ஸ்கந்தவரோதயக் கல்லூரி எதிர் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி.

* ***யாழ்ப்பாணக் கல்லூரி மைதான்ம்*** - வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி எதிர் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி 'பி' அணி.

(1-86)

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை19

ஆனைக்கோட்டை ஐக்கிய சனசமூக நிலைய அடைக்கலநாயகி முன்பள்ளியின் விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அடைக்கலநாயகி ஆலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

நிலையத்தின் தலைவர் சூ.யூட் உதயராஜ் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மானிப்பாய் பிரதேச செயலர் திருமதி பி.சிவலிங்கம் கலந்துகொள்வார்.

* * *

சுழிபுரம்,ஜூலை19

சுழிபுரம் நாகலிங்க சுவாமி முன்பள்ளியின் விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகத் தெல்லிப்பழை கோட்டக் கல்விப்பணிப்பாளர் ச.கைலாசநாதன் கலந்துகொள்வார். (28)

### வலி.கிழக்கு

## பிரதேச பண்பாட்டுப் பெருவிழாவில் ஊர்திகளின் பவனியும் வேடப் புனைவும்

அச்சுவேலி,ஜூலை19

வலி.கிழக்கு பிரதேச செயலக பண்பாட்டு பெருவிழாவை முன்னிட்டு இன்று சனிக்கிழமை காலை கலாசார ஊர்திகளின் பவனி, பண்பாட்டு ஊர்வலம், தமிழ் மூதறிஞர்களின் வேடப்புனைவு என்பன நடைபெறவுள்ளன.

நீர்வேலி கந்தசுவாமி கோயில் முன்றிலில் இருந்து முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகும். பண்பாட்டு பெருவிழா ஊர்வலத்தில் 10இற்கு மேற்பட்ட அலங்கார ஊர்திகளுடன் தமிழ்ப் பண்பாட்டை துலக்கும் வகையில் தமிழ் அன்னையின் பெரிய அளவிலான வடிவம் எடுத்துவரப்படவிருக்கின்றது.

ஆறுமுகநாவலர், பாரதியார், திருவள்ளுவர், ஒளவையார், தனிநாயகம் அடிகள், சுவாமி ஞானப்பிரகாசர் போன்ற தமிழ் மூதறிஞர்களின் வேடப்புனைவுகளும் தமிழ்ப் பாரம்பரிய விளையாட்டுக்களான சிலம்படி, தீப்பந்த விளையாட்டு, மார்ப்போர் போன்றவையும் இடம்பெறவுள்ளன.

நாளை ஞாயிற்றுக்கிழமை ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டபத்தில் நடைபெறும் ஆய்வரங்கில் தமிழ்ப் பேராசிரியர்கள் ஆய்வுரை நிகழ்த்தவுள்ளனர்.

பேராசிரியர் அ.சண்முகதாஸ், சி.சிவலிங்கராசா, கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், சிரேஷ்ட விரிவுரையாளர்களான க.அருந்தாகரன், ஸ்ரீ கிருஷ்ணானந்த சர்மா, விமல் சுவாமிநாதன் ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்தவுள்ளனர்.

ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் தமிழ்மொழிப் பாடப் பரப்பை உள்ளடக்கியதாக ஆய்வுரைகள் மேற்கொள்ளப்படவிருப்பதால் மாணவர்கள் கலந்துகொண்டு பயன்பெறலாம். (202-11)

## வெள்ளி விழா

சுழிபுரம்,ஜூலை19

பண்ணாகம் மக்கள் சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்கத்தின் வெள்ளிவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்த நிகழ்விற்கு சங்கத்தின் தலைவர் க. வாமதேவன் தலைமை வகிப்பார். விசுவத்தனை முருகன் கோயில் குருக்கள் பிரம்மஸ்ரீ ச.மு.பாஸ்கர ரவிக்குருக்கள் ஆசியுரை வழங்குவார். (202-28)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படங்கள் தரும் பதிவுகள்....



யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரீகத்துறையினர் பல்கலைக்கழகத்தில் 'இந்துக் கலைக் கூடம்' என்னும் அருங்காட்சியகம் ஒன்றை அமைத்துள்ளனர். கடந்த 7 ஆம் திகதி இக் கலைக் கூடத்தின் திறப்புவிழா நடைபெற்றது. பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் நா. சண்முகலிங்கன் கலைக்கூடத்தைத் திறந்து வைப்பதை படத்தில் காணலாம்.



தொண்டைமானாறு சந்நிதியான்ஆச்சிரமம் சந்நிதியான் சூழலில் வாழும் முதியவர்களுக்கு உடுபுடவைகளை அண்மையில் வழங்கியது. உடுபுடவைகளைப் பெற்றுக்கொண்ட முதியவர்கள் சந்நிதியான் ஆச்சிரமத்தின் முன் நின்றபோது கிளிக் செய்யப்பட்ட படம் இது. (236)



யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியல் கல்லூரியில் 'குழந்தை அரங்குக் குதூகலிப்பு' என்னும் சிறுவர் நாடக விழா அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வில் கல்லூரியின் நாடகத்துறை விரிவுரையாளர் க.கு. கமலநாதன் உரையாற்றுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். பல்கலைக் கழக கல்வியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த. கலாமணி, திருமதி கு. கலாமணி, பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன், உப பீடாதிபதி பா. தனபாலன், வைத்திய கலாநிதி வை. தியாகராஜா ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.



சரசாலை சரஸ்வதி வித்தியாலயத்தில் அண்மையில் சமயதீட்சை வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு. பிரேமகாந்தன் மாலை அணிவித்து வரவேற்கப்படுவதையும் சிவஸ்ரீ த. வீரபத்திர சிவகுருக்கள், சிவஸ்ரீ க. கிருபானந்தக் குருக்கள், பாடசாலை அதிபர் திருமதி ஜெ. தேவேந்திரராசா ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (323)



நல்லூர் பிரதேசசபை தனது பிரிவிலுள்ள பாற்பண்ணைப் பகுதியில் நடமாடும் மருத்துவ சேவையை நடத்தியது. மருத்துவ பரிசோதனை செய்யும் வைத்தியர்களையும் நோயாளர்களையும் படத்தில் காணலாம்.

(படங்கள்: நம்பி)




தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தினர் உலக புத்தக தினத்தையொட்டி சாவகச்சேரி பிரதேசசபை கச்சாய் பொது நூலகத்திற்கு ஒரு தொகுதி நூல்களை வழங்கினர். கழகச் செயலாளர் லயன் கா. இராசதுரை நூல்நிலைய நூலகர் திருமதி சா. பால சுப்பிரமணியத்திடம் புத்தகங்களைக் கையளிக்கின்றார்.

(படம்: தென்னவன்)




சுன்னாகம் பொது நூலகத்தின் ஏற்பாட்டில் , ஞானம், சஞ்சிகையின் அறிமுக விழா நூலக மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

விழாவில் கௌரவிக்கப்பட்ட ஞானம் சஞ்சிகையின் ஆசிரியர் டாக்டர் தி.ஞானசேகரன் பதிலுரையாற்றுகின்றார். நிகழ்விற்கு தலைமை வகித்த வலி.தெற்கு பிரதேச சபைச் செயலாளர் திருமதி ச. சொக்கலிங்கம், நூலகர் க. சௌந்தர்ராஜன், கவிஞர் ம.பா. மகாலிங்கசிவம் ஆகியோர் மேடையில் அமர்ந்திருக்கின்றனர்.

(படம்: குமரன்)



வறுமைக் கோட்டிலுள்ள கண்பார்வையில் குறைபாடுள்ள, தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு யாழ். சமூக அபிவிருத்தி மன்றம் அண்மையில் மூக்குக் கண்ணாடிகளை இலவசமாக வழங்கியது. மூக்குக் கண்ணாடிகள் வழங்கும் நிகழ்வில் எடுக்கப்பட்ட படம். மன்றத்தின் தலைவி திருமதி ஜெபமணி யோசேப்பும் படத்தில் காணப்படுகிறார்.



கரவெட்டிப் பிரதேச மீள்எழுச்சித் திட்ட அறிமுக விழா கரணவாய் மேற்கு அந்திரான் கிராமத்தில் நடைபெற்றது.

கிராமமக்களுக்கு யாழ்.மாவட்ட திட்டப் பணிமனை[illegible] உத்தியோகத்தர் கே. பிரபாகரன் திட்டம் குறித்து விளக்கமளிப்பதைப் படத்தில் காணலாம்.

(படம்: [illegible])



ஆவரங்கால் மேற்கு விவேகானந்தா சனசமூக நிலையத்தால், யுனிசெப் நிறுவனத்தின் 26 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் நிர்மாணிக் கப்படவுள்ள தும்புத் தொழிற் சாலைக்கான அடிக்கல் நாட்டும் விழா அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் ஆவரங்கால் மேற்கு கிராம அலுவலர் இ. கணேசலிங்கம் அடிக்கல் நடுகின்றார். அருகில் கிராம அலுவலர் இ. யோக ராசா, நிலைய ஆலோசகரும் ஓய்வுபெற்ற அரச அலுவலருமான சி. கிருஷ்ண பிள்ளை, ஓய்வுபெற்ற ஆசிரியர் ந. கணபதிப்பிள்ளை ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். (236)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவாளர் உயர்திரு. பெரியதம்பி கனகசபாபதி அவர்களின்
# பணிநலன் பாராட்டு விழாச் சிறப்பு மலர் – 19.07.2008

## பணி பல ஆண்டுகள் தொடரவேண்டும்



நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் உயர்திரு.பெ.கனகசபாபதி அவர்களைப் பாராட்டி விழா எடுப்பதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். நீண்டகாலமாக சமூகத்துடன் இணைந்து நற்பணி ஆற்றும் கனகசபாபதி அவர்கள் எல்லோரிடமும் இனிமையாகப் பழகும் குணமும் விடாமுயற்சியும் எளிமையான தோற்றமும் எடுத்த காரியத்தை செவ்வனே ஆற்றும் குணமும் எல்லோரும் கூட்டுறவாளர்களாக வாழவேண்டும் என்பதில் விருப்பமும் உடையவர். சமய சமூகப் பணிகளை முன்னின்று ஆற்றி பல ஆலயங்களிலும் பொது இடங்களிலும் தலைமையேற்று பணியாற்றி எல்லோரையும் மகிழ்விப்பவர். கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக நல்லூர் வாழ் மக்களுக்கு நிறைவாக சேவை செய்து எல்லோருடைய அன்பையும் பெற்றுள்ளார். இவருடைய பணி பல ஆண்டுகள் தொடர வேண்டும் என வாழ்த்துகின்றோம். பெ.கனகசபாபதியினுடைய சேவையை பெற்றுக்கொண்டு பணிநலன் பாராட்டு விழா எடுக்கும் விழாக் குழுவினரை வாழ்த்திப் பாராட்டுகின்றோம். இன்று போல் என்றும் பெ. கனகசபாபதி சிறப்புடன் வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பராமாசாரிய சுவாமிகள்,
*இரண்டாவது குரு மஹாசந்நிதானம்.*

## ஆனந்தமாக அவரது வாழ்வு சிறக்கட்டும்

'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு'



என்பதை உணர்ந்து குடும்பங்களின் கூட்டுறவு தொடங்கி பலநோக்கு கூட்டுறவு வரை உயர்திரு.பெ.கனகசபாபதி அவர்கள் ஆற்றிய சேவை மெய்க்கீர்த்தியானவை என்கிறார் பேராசிரியர் கா.குகபாலன் அவர்கள்.

1986 முதல் நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராகவும் 1997 முதல் யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபையின் தலைவராகவும் பணியாற்றும் இவர் மக்களிற்கு ஆற்றிய சேவை மறக்கமுடியாதது. இடர் மிகுந்த காலப் பகுதிகளில் பல்வேறு சவால்களுக்கும் முகம் கொடுத்து இயல்பாக கூட்டுறவுச் சங்கச் செயற்பாடுகளுக்குத் தலைமை தாங்கி வழிநடத்தியமை பாராட்டிற்குரியது.

இந்தியாவின் பூனே நகரில் 2002ஆம் ஆண்டில் இவர் கற்ற முகாமைத்துவ, விவசாய, கிராம அபிவிருத்தி பற்றிய அறிவை யாழ்.மாவட்டத்தில் தொடர்ந்தும் பயன்படுத்த ஏற்ற வகை செய்ய வேண்டியது கூட்டுறவு முயற்சியின் கடமை எனலாம்.

சமாதான நீதிவானான திரு.பெ.கனகசபாபதி அவர்கள் குடும்பங்களின் சமாதானத்தை அதிகரிக்கவும் ஆன்மீக ஆரோக்கியத்தை அதிகரிக்கவும் தன்னாலியன்ற பணி ஆற்றி வருகிறார். அமைதியாக, ஆனந்தமாக அவரது வாழ்வு மென்மேலும் சிறக்க இறையருளை இறைஞ்சுவதுடன் அவரது நற்பணிக்காக என் உளமார்ந்த வாழ்த்துக்களும் உரித்தாகட்டும்.

க.கணேஷ்,
*அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலர்,*
*யாழ்.மாவட்டம்.*

## நிறை ஆளுமை உடையவர்



திரு.கனகசபாபதி அவர்கள் இரண்டு தசாப்தங்களுக்கு மேல் கூட்டுறவு இயக்கத்தில் ஈடுபட்டிருந்தமையினால் இன்றைய தலைமுறையினருக்கு அவரை ஒரு கூட்டுறவாளர் என்ற வகையில்தான் பெரும்பாலும் தெரியும். எமது பிரதேசம் கடந்த 20 வருடங்களுக்கும் மேலாக பல இன்னல்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலையில் உணவு விநியோகம் சீரற்றும் அதன் விளைவாக உணவுப் பற்றாக்குறையும் அடிக்கடி ஏற்படுவது சகஜமாகிவிட்டது. இப்படியான சந்தர்ப்பங்களிலெல்லாம் உணவுப் பொருள்களை நியாய விலையில் சகலருக்கும் கிடைக்கும் வகையில் பங்கிட்டு எமது மக்களைப் பட்டினிச் சாவிலிருந்து காப்பாற்றியது கூட்டுறவுச் சங்கங்களேயாகும். இவ்வரிய பணியினை திரு.கனகசபாபதி அவர்கள் நல்லூர் ப.நோ.கூ.சங்கத் தலைவராக கடந்த 22 ஆண்டுகள் கடமையாற்றி நிறைவேற்றி வருகிறார்.

இச்சேவையினைச் சரிவர நிறைவேற்றுவதற்குரிய தலைமைத்துவம். ஆளுமை போன்றவற்றை உரும்பிராய் இந்துக்கல்லூரியே அவருக்கு வழங்கியது. இக்கல்லூரியில் அவர் கற்றவேளையில் கல்வியில் சிறந்த மாணவனாக விளங்கியதோடு உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம் போன்ற விளையாட்டுக்களிலும் ஈடுபட்டுக் கல்லூரியைப் பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளார். மேலும் கல்லூரியில் ஒரு மாணவத் தலைவராகவும் செயற்பட்டுள்ளார். இவ்வனுபவங்கள் அவருக்குப் பிற்காலத்தில் பெரிதும் உதவியுள்ளன.

திரு.கனகசபாபதி அவர்களின் ஆளுமை விருத்தி முழுமையானது. அதன் பேறாக அவர் அடிமட்ட அரசியல், தேசிய அரசியல், சமூகசேவை, மக்கள் நலன்கள் ஆகியவற்றிலும் தன்னை ஈடுபடுத்தி முழுநேர சேவையாளனாகத் தன்னை அர்ப்பணிக்கக் கூடியதாக இருந்தது.

திரு.கனகசபாபதி அவர்கள் நீடூழி வாழ்ந்து தன் சேவையினைத் தொடர ஆண்டவன் அருள்புரிய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

அ.பஞ்சலிங்கம்
*முன்னாள் அதிபர்.*



காலம்: இன்று (19.07.2008) சனிக்கிழமை பி.ப. 2மணி
இடம்: கொக்குவில் வளர்மதி முன்னேற்றக்கழக வேலாயுதபிள்ளை மண்டபம்
தலைவர்: **திரு.அ.பஞ்சலிங்கம்** *(இளைப்பாறிய அதிபர்)*
மங்கல இசை:
மங்கல விளக்கேற்றல்: **திரு.அ.அகிலதாஸ்** *(அதிபர், கொக்குவில் இந்துக் கல்லூரி)*
**Dr.ந.அரவிந்தன்** *(யாழ்.போதனா வைத்தியசாலை)*
**திரு.கு.அம்பிகைபாகன்** *(கிராம அலுவலர், கொக்குவில் வடகிழக்கு J/121)*
**திரு.கா.நடராசா** *(நிர்வாக உறுப்பினர், மஞ்சத்தடி அருணகிரிநாதர் சிவசுப்பிரமணியர் கோயில்)*
மலர் வெளியீடு:
*வெளியீட்டுரை:* **திரு.சோ.பத்மநாதன்** *(இளைப்பாறிய அதிபர், பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை)*
*முதற்பிரதி பெறுநர்:* **திரு.த.கந்தசாமி J.P.** *(உரிமையாளர், பெஷன் ஹவுஸ், யாழ்ப்பாணம்)*
விழா நாயகர் கௌரவிப்பு:

## வாழ்நாள் முழுவதும் மக்களுக்காக சேவை செய்பவர்



சமூக மறுமலர்ச்சியைத் தனது தாரக மந்திரமாகக் கொண்டு எமது சமூகத்தின் வளர்ச்சிக்கு தனது வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்து எம் முன்னே நடமாடுபவர்தான் உயர்திரு. பெரியதம்பி கனகசபாபதி அவர்களாவார். கூட்டுறவு அபிவிருத்தி, கிராமிய வளர்ச்சி, சமய மேம்பாடு, விளையாட்டுத் துறையில் புத்தூக்கம் போன்ற பல சமூக, சமய சேவைகள் என தனது வாழ்நாள் முழுவதும் மக்களுக்காகச் சேவை செய்வதையே தனது குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றார். இணுவில் கிராமத்தில் உயர்திரு.பெரியதம்பி- இராசம்மா தம்பதிகளுக்கு மகனாக 1939 ஆம் ஆண்டு பிறந்த இவர் தனது ஆரம்பக் கல்வியை இணுவில் சைவ மகாஜனா வித்தியாலயத்திலும், இடைநிலைக் கல்வியை உரும்பிராய் இந்துக் கல்லூரியிலும் கற்றார். ஒரு மனிதனது பாடசாலை வாழ்வானது உன்னதமானதும், மறக்கமுடியாததும், எதிர்கால வாழ்விற்கான திசையினைக் காட்டி நிற்பதுமாகும். உரும்பிராய் இந்துக்கல்லூரியில் பெற்ற கல்வி மற்றும் அனுபவங்கள். தன்னை ஒரு சமூக மேம்பாட்டினை வளர்ப்பதற்கான பயிற்சியாக அமைந்திருந்தது. கல்லூரியில் பயின்ற காலத்தில் சைவ அமைப்புக்களுடன், இணைந்து செயற்பட்டது மட்டுமன்றி மாணவர் தலைவராக இருந்து தலைமைத்துவப் பண்புகளாய் பெற்றுக்கொள்வதற்கானப் பயிற்சிக்களமாக இருந்துள்ளது. தனது கல்விக் காலத்தில் கற்றல் செயற்பாட்டுடன், விளையாட்டுத் துறையிலும் ஆர்வம் கொண்டவராக விளங்கினார். இவர் உயர் வகுப்பில் கற்றுக்கொண்டிருந்த காலத்தில் தொழில் வாய்ப்புத் தேடி வரவே, பண்டகசாலை முகாமையாளராகப் பதவியேற்றார். கல்விப் பாதை திசை மாறியது. கூட்டுறவில் ஆர்வம் கொண்டு கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் இணைந்து பயிற்சியை நிறைவு செய்தார்.

கிராமத்தின் வளர்ச்சியே நாட்டின் வளர்ச்சி எனக் கருத்தில் கொண்ட திரு.கனகசபாபதி அவர்கள் இணுவில் கிழக்கு இளைஞர் கழகம், இணுவில் ஜோதி விவசாயக்கழகம், வலிகாமம் வடக்கு விவசாயக் கழகங்களின் சமாசம், விவேகானந்தர் சனசமூக நிலையம், விவேகானந்தர் கிராம அபிவிருத்திச் சங்கம், இணுவில் இந்து விளையாட்டுக் கழகம் போன்றவற்றினை உருவாக்கி அதன் முக்கிய பதவிகளில் இருந்து சமூக சமய விளையாட்டுத் துறைகளை மேம்படுத்தியவர்.

மேலும் ஒருவரின் இவ்வுலக வாழ்வின் இறுதிப்பயணத்தின் முடிவு மயானமேயாகும். 1967ஆம் ஆண்டு காரைக்கால் இந்து மயானத்தை அபிவிருத்தி செய்வதற்கு இந்துமயான அபிவிருத்திச் சங்கத்தை உரு வாக்கி அதன் செயற்பாட்டிற்கு பெரும்பங்காற்றியது மட்டுமல்லாது 2006ஆம் ஆண்டு நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளின் தேவையை நிறைவு செய்யும் பொருட்டு வரியிறுப்பாளர் சங்கத்தினை உருவாக்கி மக்களது தேவைகளை நிறைவு செய்ய முனைப்புடன் செயல்பட்டு வருகின்றார்.

குறிப்பாக நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட இந்து மயானங்களை அபிவிருத்தி செய்வதற்கு மயான அபிவிருத்தி சபைகளை உத்வேகப் படுத்தி அபிவிருத்தியை காணமுற்பட்டவர்.

திரு.கனகசபாபதி அவர்கள் கூட்டுறவு இயக்கத்தில் மிகுந்த நம்பிக்கை கொண்டு கூட்டுறவுடன் தன்னை இணைத்துக்கொண்டவர். 1986ஆம் ஆண்டு நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் தலைமைத்துவத்தினை ஏற்ற இவர் நீண்டகாலமாக அதன் வளர்ச்சியில் பெரும் மகிழ்வு கொண்டு செயற்பட்டுவருகிறார். இவரது கௌரவமான, கண்ணியமான சேவையைக் கருத்திற்கொண்டு யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபையின் தலைவராக 1997ஆம் ஆண்டிலிருந்து சேவையாற்றி கூட்டுறவின் மகத்துவத்தை வெளிக்கொணர்ந்து வருகின்றார். கூட்டுறவுடன் தொடர்புடைய பல சர்வதேச கருத்தரங்கு பயிற்சிப் பட்டறைகளில் பங்குபற்றி கூட்டுறவின் ஆழ அகலத்தை அறிந்துகொண்டவர்.

கொக்குவில், கோண்டாவில் கிராமங்களின் வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்வதற்கு கிராம சபையினை அடித்தளமாகக்கொண்டு செயற்பட்டவர். 1968ஆம் ஆண்டு கிராம சபைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று சபையின் உப தலைவராக பதவி வகித்தவர். மேலும் தமிழ்மக்கள் அனுபவித்துவருகின்ற அரசியல், சமூக, பொருளாதார பிரச்சினைகளை முன்னெடுத்துச்செல்வதை கருத்திற்கொண்டு தந்தை செல்வாவின் அரசியல் கொள்கைகளின் வழிநின்று செயற்பட்டு வருபவர்.

ஆளுமை செயற்திறன் போன்றவற்றை பின்னணியாகக்கொண்டு கறைபடியாத கைகளுடன் எம் மக்கள் மத்தியில் தொடர்ந்தும் சேவையாற்றி வரும் உயர்திரு.கனகசபாபதி அவர்கள் பல்லாண்டு காலம் வாழ்ந்து சமூகத்தின் உயர்வுக்கு சேவையாற்ற வேண்டுமென எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

*பேராசிரியர்* கா.குகபாலன்.

## நல்நோக்குடன் வாழும் பொதுச் சேவையாளன்



எமது மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் என்ற வாக்குக்கு இலக்கணம் வகிக்கும் நல்நோக்குடன் வாழ்பவர் பொதுசேவையாளரும் கூட்டுறவாளருமான திரு.பெரியதம்பி கனகசபாபதி அவர்கள். அவரது சேவையினைப் பாராட்டி கௌரவிக்கும் நல்நோக்குடன் நடைபெறவிருக்கும் விழா பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். பொதுத் தொண்டுடன் ஆன்மீகத் தொண்டிலும் அவரது ஈடுபாட்டை நான் அறிவேன். மக்கள் சேவையே மகேசன் சேவை என்பார்கள் அறிஞர்கள். தான் பிறந்த மண்ணிற்கு மட்டுமின்றி தமிழ் மக்களுக்காக அவர் ஆற்றும் பணி யாவரும் அறிந்ததே.

நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் யாழ். கூட்டுறவுச் சபை ஆகியவற்றின் தலைவராகப் பதவி வகிப்பதால் அவரது சேவை பரவலாக எல்லா மக்களுக்கும் சென்றடைவது யாவரும் அறிந்த ஒன்றே. மஞ்சத்தடி அருணகிரிநாத சிவசுப்பிரமணிய ஆலயம், அரசோலை விநாயகர் ஆலயம், இணுவை சிவகாமி அம்பாள் ஆலயம் யாவும் அவரது ஆன்மீகத் தொண்டின் ஈடுபாட்டினைப் பெற்றுள்ளன. இவரது செயற்பாடுகள் மற்றவர்களுக்கு ஒரு வழிகாட்டியாகும்.

சுய விளம்பரத்தை விரும்பாத ஒரு சமாதான நீதிபதியாக விளங்கும் இவர் பலருக்கும் தன்னாலான பணியினைச் செய்து வருகிறார். ஊரும் மக்களும் பாராட்டி இவருக்கு விழா எடுப்பது பெருமைப்படவேண்டிய ஒன்று. மேலும் இவரது பணி எமது மக்களுக்கு கிடைக்கவேண்டும். இவர் ஆரோக்கியமாக வாழ்ந்து சேவையாற்ற வேண்டுமென வாழ்த்துவதுடன் நீண்ட ஆயுளுடன் நலம்பல பெற்று மேன்மேலும் சிறந்து விளங்க அம்பாள் அருள்புரியவேண்டும் எனப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

*வேதசிவாகமக் கிரியாரத்னம்*
சிவஸ்ரீ சாம்பசிவ சோமசபேசக் குருக்கள்,
*பிரதமகுரு, சிவகாமி அம்மன் கோயில், இணுவில்.*

## இளமை முதல் அர்ப்பணிப்புடன் தொண்டுபுரிபவர்



சீரும் திருவும் பொலிந்து இசைத்துறையில் சிறந்துவிளங்கும் இணுவையம்பதிக்குப் புகழ்சேர்க்கும் பெரியோர்களுள் ஒருவராக திகழும் திரு.பெரியதம்பி கனகசபாபதி அவர்களது சேவை நலன் பாராட்டு விழாச் சிறக்கவும் விழா மலர் சிறக்கவும் ஆசிச்செய்தி வழங்குவதில் வெகுவாக மகிழ்கின்றேன்.

1993ஆம் ஆண்டு ஆடிமாதம் இணுவில் மஞ்சத்தடி விநாயகர் ஆலயத்துக்கும் அருணகிரிநாத சிவசுப்பிரமணிய ஆலயத்துக்கும் உடனடியாக பூசகர் தேவைப்பட்ட நிலையில் ஆலய செயலாளர் திரு.பெ.கனகசபாபதி அவர்களும் திரு.செ.சிவலிங்கம் அவர்களும் சுதுமலை நாகேந்திரக் குருக்கள் மூலம் என்னை அணுகினர். நானும் உடன்பட்டு வரும்போது இரவு 8 மணி. திரு.பெ.கனகசபாபதி அவர்கள் இரு ஆலயங்களினதும் திறப்புக்களைக் கையளித்தார். அந்நேரம் பொன்னான நேரமாக இருந்திருக்கவேண்டும். இணுவில் மஞ்சத்தடி விநாயகர் ஆலயத்தில் தொடங்கிய பணி காரைநகர் சிவன்கோயில் பூசகராகவும் இணுவிலில் பல சிறிய கோயில்களின் பூசகராகவும் தொடர்கிறது. அன்று முதல் எனது பணிக்கு திரு.பெ.கனகசபாபதி அவர்கள் பக்கத்துணையாக விளங்குகிறார்.

தன்னலமற்ற கூட்டுறவுச் சேவையினால் இன்று யாழ். மாவட்டக் கூட்டுறவுத்துறையிலே பெரிய பதவியான யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவராக விளங்கும் இவரது சேவை மேலும் சிறப்புடன் தொடர்வதற்கு இறையருள் வேண்டி ஆசிகூறுகின்றேன்.

பிரம்மஸ்ரீ ம.கிருஷ்ணமூர்த்தி ஐயர்.

## மனநிறைவும் தியாகமும் அவர் பிறவிக்குணம்



திரு.பெரியதம்பி கனகசபாபதி அவர்களின் பல்வேறு சமூக சேவைகள் நான் நீண்டகாலமாக அறிந்திருக்கின்றேன். தந்தை செல்வா அறங்காவல் குழுவின் சிரேஷ்ட உறுப்பினராகிய திரு.கனகசபாபதி தமிழரசுக் கட்சியின் ஆரம்ப கால உறுப்பினர். தற்பொழுது அதன் பொருளாளர்.

இன்று தந்தை செல்வாவின் நேர்மையையும் தியாகத்தையும் உணர்ந்து அவற்றினை மக்களுக்கு சளைத்துப் போகாமல் எடுத்துக் கூறுபவர். திரு.கனகசபாபதி வாழ்க்கையில் பல்வேறு அனுபவங்களைப் பெற்றவர். ஆனால் மனநிறைவும் தியாக மனப்பான்மையும் அவரின் பிறவிக்குணம்.

உரும்பிராய் இந்துக்கல்லூரியில் உதைபந்தாட்ட வீரராகப் பயிற்சி பெற்றவர்.

திரு.கனகசபாபதி எல்லா மதங்களையும் போற்றும் பண்பாளர். மானிப்பாயில் அவர் மறுமலர்ச்சி மன்றத்தில் ஆற்றிய சேவை இதனைப் புலப்படுத்துகின்றது. சமயக் காழ்ப்பினை சிறிதளவேனும் இவரிடத்தில் நான் காணவில்லை. இன்று இவரின் நண்பர்கள் இவரை வாழ்த்த விழாவெடுக்கின்றனர். அவர்களோடு சேர்ந்து நானும் இனிய நண்பன் கனகசபாபதி அவர்கள் நீடூழி வாழ வாழ்த்துகின்றேன்.

*பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன்,*
*முன்னாள் அத்தியட்சகர், தென்னிந்தியத் திருச்சபை.*

விழாக்குழு:
**வளர்மதி முன்னேற்றக் கழகம்,**
சம்பியன் லேன்,
கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாவகச்சேரி நகரசபையின் உள்ளூராட்சி வார இறுதிநாள் நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்கள்.

உள்ளூராட்சி வார நகரணி சிறப்பு மலரை நகரசபைச் செயலாளர் திருமதி கு.ஆறுமுகம் வெளியிட்டு வைக்க முதல் பிரதியை மக்கள் வங்கியின் சாவகச்சேரிக்கிளை முகாமையாளர் க.சண்முகலிங்கம் பெறுவதை முதலாவது படத்தில் காணலாம்.

அரச பணியில் 25வருட சேவையை நிறைவு செய்த சபை ஊழியர்கள் கௌரவிக்கப்பட்டு விருந்தினர்கள் முன் அமர்ந்திருப்பதை இரண்டாவது படத்தில் காணலாம்.

முன்பள்ளிச் சிறார்களிடையேயான போட்டியில் முதலாம் இடம்பெற்ற மாணவி, சமூக நிலையங்களுக்கிடையே நடைபெற்ற தாச்சிப் போட்டியல் வெற்றிபெற்ற உதயசூரியன் வி.க.அணியின் தலைவர் ஆகியோருக்கு தென்மராட்சி உதவிப் பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் பரிசில்கள் வழங்குவதை அடுத்துள்ள படங்களில் காணலாம்.

(படங்கள்: தென்னவன்)

# சங்கங்கள், நிறுவனங்களின் புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், ஜூலை19

தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

சங்கத்தின் 19 கிளைகளிலிருந்தும் தெரிவுசெய்யப்பட்ட 91 உறுப்பினர்களின் முதலாவது பொதுச் சபைக் கூட்டம் கடந்த 12ஆம் திகதி நடைபெற்றது.

சங்கத்தின் தலைவராக வே.விநாயகமூர்த்தியும் உப தலைவராக இ.மகாலிங்கமும் தெரிவுசெய்யப்பட்டனர்.

ஏனைய இயக்குநர் சபை உறுப்பினர்களாக த.ஆறுமுகம், வீ.சிவசுப்பிரமணியம், அ.கந்தசாமி, செல்வி யோ. ரெமியா, செல்வி து.ஜெயமதி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (207)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை19

காரைநகர் பிரதேச சபைக்கு புதிய ஆலோசனைச் சபை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

காரைநகர் பிரதேச சபையின் ஆலோசனைச்சபை அங்குரார்ப்பணக் கூட்டம் அண்மையில் காரைநகர் பிரதேச சபைச் செயலாளர் இரா.லோகநாதன் தலைமையில் பிரதேசசபைத் தலைமயகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பின்வருவோர் ஆலோசனைச் சபைக்கு தெரிவு செய்யப்பட்டனர்.

வியாவில் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் செ.இராமுப்பிள்ளை, நீலங்காடு கடற்றொழிலாளர் சங்கத் தலைவர் பொ.கணேசு, சிவகௌரி சனசமூக நிலையச் செயலாளர் க.நாகேஸ்வரி, வேதரடைப்பு சனசமூக நிலையத் தலைவர் செ.கந்தசாமி, கல்லந்தாழ்வு ஸ்ரீ முருகன் ஆலய பரிபாலன சபைத் தலைவர் ம.அப்புத்துரை-

அம்பாள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் க.இராஜச்சந்திரன், விறாளை சனசமூக நிலையத் தலைவர் சு.கந்தையா, பிட்டியெல்லையைச் சேர்ந்த க.தம்பையா, மணற்காட்டைச் சேர்ந்த எஸ்.சுந்தரமூர்த்தி, யாழ்ற்ரன் கல்லூரி அதிபர் ந.பரமசிவம் ஆகியோரே ஆலோசனைச் சபைக்குத் தெரிவாகி உள்ளனர். (202-250)

* * *

நாவற்குழி, ஜூலை19

கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையத்தின் புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

நிலையத்தின் நடப்பாண்டு தலைவராக சி.சின்னத்தம்பியும், செயலாளராக செ.மதனரூபனும் பொருளாளராக க.முரளியும் தெரிவு செய்யப்பட்டனர். (202-288)

## தென்மராட்சி தெற்கில் நெற்செய்கை மேற்கொள்வோருக்கு உரமானியம்

யாழ்ப்பாணம், ஜூலை 19

தென்மராட்சி தெற்குப் பிரதேச நெல் வயல்களில் காலபோக நெற்செய்கை மேற்கொள்வோருக்கு உரமானியம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

உரமானியம் பெறுவதற்கான விண்ணப்பங்கள் அந்தந்த கமக்கார அமைப்புகள் மூலம் வழங்கப்படுகின்றன.

கைதடி- நாவற்குழி கமக்கார அமைப்பு எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நெற்செய்கை மேற்கொள்வோர் உரமானிய விண்ணப்பப் படிவங்களைப் பெற்று விண்ணப்பிக்குமாறு அமைப்பின் தலைவர் ந.திருநீலகண்டன் கேட்டுள்ளார். (202-207)


## UNIVERSITY OF JAFFNA
## TENDER NOTICE

The Chairman, Procurement Committee, University of Jaffna will receive sealed tenders from civil works contractors registered with ICTAD for following works.

| Details of Work | Refundable deposit (Rs) | Non-Refundable deposit (Rs) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|
| Construction of cycle shed at Faculty of Medicine, University of Jaffna | 15,000.00 | 500.00 | M7 |
| Repairs to house at Adiyapatham Road, Kokuvil, University of Jaffna. | 7,500.00 | 500.00 | M8 |

Tender forms may be obtained from Senior Assistant Registrar/ Capital Works & Planning University of Jaffna on producing valid registration book and receipt for the cash payment for the above tender fees at the Shroff's Counter, University of Jaffna until 25.07.2008.

Perfected tenders should be sealed and marked with the .job and the name of the work on the top left hand corner of the envelop and sent by registered post to reach the Registrar, University of Jaffna P.Box 57. Thirunelvely, Jaffna or deposited in the tender box kept at Registrar's Office, University of Jaffna.

Tenders will be accepted till 2.00 p.m on 30.07.2008 and open at 2.30 pm after the time of closing.

Tenderers or their accredited representatives are allowed to be present at the time of opening of tenders.

Tender forms may be inspected by the tenderers free of charge at the Capital Works & Planning Branch of this University during office hours if necessary.

P.0 Box 57, Thirunelvely, Jaffna. 16/07/2008 — Registrar, University of Jaffna. (C/553793)

## இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் லேன், நல்லூர். (76426)

## விற்பனைக்கு

ஆட்டுக்கடா விற்பனைக்குண்டு.
தொடர்பு:
22, கொழும்புத்துறை வீதி, சுண்டிக்குளி. (76281)

## விற்பனைக்கு

[illegible]
தொடர்பு: ஆனந்தராகம்
இல.9, றக்காறோட், யாழ்ப்பாணம்.
(மின்லுக்கு முன்பாக, ICRC இற்கு அடுத்த வீடு). (76411)

## பாலன் மில்ஸ்

தேங்காய் கொப்பறா, இலுப்பைப்பருப்பு, எள் போன்றவற்றை 3கிலோவில் இருந்து 1000 கிலோ வரை உடன் எண்ணெயாக ஊற்றிப் பெற்றுக்கெள்ளலாம். மற்றும் No.1. R.S.T. மார்க் தேங்காய் எண்ணெய்யும் பெற்றுக்கொள்ளலாம்.

பாலன் மில்ஸ்
மாவடிச் சந்தி, வட்டுக்கோட்டை. (76017)

## ஃபக்ஸ் வசதி

சாவகச்சேரியில் ஃபக்ஸ் வசதியுடன் கூடிய தொலைத் தொடர்புகளுக்குத் தொடர்பு கொள்ளவும்.

அரசடி கொமினிக்கேசன்
[illegible]
T.P./Fax.: 021 226 3888. (சி/553804)

## மாபெரும் இலவச க.பொ.த. உயர்தர பரீட்சை வழிகாட்டிக் கருத்தரங்கு -2008

இன்னும் சில தினங்களில் முகம்கொடுக்க இருக்கும் க.பொ.த.உயர்தர மாணவர்களே! உங்களுக்காக "யாழ்ப்பாணம் றோட்டரக்ட் கழகம்" நடத்தும் வடக்கின் பிரபல ஆசிரியர்களையும் கடந்த பல வருடங்களாக க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு பிரதம பரீட்சகர்களாக கடமையாற்றும் யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர்களையும் கொண்டு நடத்தப்படுகின்ற மாபெரும் கருத்தரங்கை தவறவிடாதீர்கள்.

அனுமதி இலவசம்!
வினாவிடை தாள்கள் இலவசம்!
முதல் 250 மாணவர்களுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.
இடம்: யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மண்டபம்.

| திகதி | நேரம் | பாடங்கள் | ஆசிரியர்கள் |
|---|---|---|---|
| 21.07.2008 | 8.30Am | Biology | Mr. Gengatharan/ Mr.Gunaseelan |
| 21.07.2008 | | Combied Mathamatics | Mr.Senthilnathan/ Mr.Senthilkumaran |
| 22.07.2008 | 8.30Am | Biology | Mr. Gengatharan/ Mr.Gunaseelan |
| 23.07.2008 | 8.30Am | Physics | Dr. Sivayogan/ Mr.Kumaran |
| 23.07.2008 | | Chemistry | Dr. Srikaran/ Mr.Sivaththiran |

கணக்கீட்டில் புதிய விடயங்களாக புதிய கணக்கீட்டு முறைமை VAT, SLAS போன்றவையும் உள்ளடக்கப்படும்.

| | | | |
|---|---|---|---|
| 24.07.2008 | 8.30am | Accounting | Mr.Sam |
| 25.07.2008 | 8.30am | Economics | Mr.S.S.Sri |
| 28.07.2008 | 8.30am | Business studies | Mr.Basil |

தவறவிடாதீர்கள்.

யாழ்ப்பாணம் றோட்டரக்ட் கழகம்.

(78235)


## நினைவஞ்சலி



அமரர் இராசையா ஜெயரட்ணம் (R.A.Jey)
(Electronic Engineer and Senior Scientist in California)

மலர்வு: 25.11.1941 உதிர்வு: 20.05.2008

(அன்னார் யாழ்ப்பாணம், நவாலியைப் பிறப்பிடமாகவும் அமெரிக்காவை வசிப்பிடமாகக் கொண்டவரும் காலஞ்சென்றவர்களான இராசையா- நாகரத்தினத்தின் அன்பு மகனுமாவார்).

ஆறவில்லை எம்மனது அழியாத
உங்கள் நினைவுகளால்
தேசமொரு பக்கமாய் நாம் வாழ்ந்தாலும்
தூர தேசமெல்லாம் உங்கள் உறவுகள்
சிதறுண்டு கிடந்தாலும்
எப்போதும் உங்கள் நினைவால் வாடுகிறோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தகவல்:
வெள்ளவத்தை. கபிலநாதன் செல்வராசி (சகோதரி).
(சி/553782)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## இந்தியாவுடன் செய்ய உத்தேசித்திருந்த பொருளாதார ஒத்துழைப்பு உடன்பாடு 'அவுட்'?

'எடுத்தேன்; கவிழ்த்தேன்' என்ற நிர்வாகப் போக்கினால் கொழும்பு அரசு பல குழப்பங்களைச் செய்து வருகின்றது.

அந்த வகையில் இப்போது இந்தியாவுடனான பொருளாதார ஒப்பந்தம் ஒன்றும் சிக்கலுக்கு உள்ளாகியிருக் கின்றது.

இதோ சார்க் மாநாடு நடைபெறும் சமயத்தில் - அதை ஒட்டி - இலங்கை மற்றும் இந்திய அரசுத் தலைவர்கள் முன்னிலையில் இரு நாடுகளுக்கும் இடையிலான 'விசால பொருளாதார பங்குதாரர் ஒப்பந்தம்' (Comprehensive Economic Partnership Agreement - CEPA) ஒன்று கைச்சாத்திடப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த ஒப்பந்தத்தைத் தயாரிப்பதில் இலங்கை - இந்திய அதிகாரிகளும், அரசியல் தலைவர்களும் மும்முரமாகச் செயற்பட்டனர். ஒப்பந்த நகல் வடிவமும் தயார் என்கின்றனர்.

ஆனால் இந்த ஒப்பந்தத்தை இப்போதைக்குச் செய்யாமல், மெல்ல விடயத்தை அப்படியே அடங்கிப் போக விட்டுவிடுவது எனக் கொழும்புத் தலைமை இப்போது தீர்மானித்துவிட்டதாகக் கூறப்படுகின்றது.

இனவாதக் கட்சிகளின் இந்திய விரோத நிலைப்பாட்டுக்குத் தலைசாய்த்தே இந்த முடிவு எனக் கூறப்படுகிறது.

இதுவரை ஆரவாரமான எடுப்புகளோடு தயாரிக்கப்பட்ட அந்த ஒப்பந்தத்தை, இப்போது பேரினவாதிகளின் எதிர்ப்புக் காரணமாக அப்படியே கிடப்பில் போட கொழும்புத் தலைமை முடிவு செய்திருக்கின்றது என்றும் கூறப்படுகின்றது.

முதலில் கடந்த வாரம் ஜே.வி.பியின் அதிருப்தி அணியைச் சேர்ந்தவரும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவருமான விமல் வீரவன்ஸ இந்த உத்தேச ஒப்பந்தத்துக்கு எதிராகச் செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தினார். இந்த ஒப்பந்தம் செய்யப்படுவதற்கு முன்னர் அது குறித்து நாடாளுமன்றத்தில் விசேட விவாதம் நடத்தப்பட வேண்டும் என்று கோரிய அவர், நாடாளுமன்றம் தீர்மானிக்கும்வரை இந்த ஒப்பந்தத்தில் அரசு கையெழுத்திடக்கூடாது என்று வற்புறுத்தினார்.

இந்நிலையில், மற்றொரு பேரினவாதக் கட்சியான ஜாதிக ஹெல உறுமயவின் மூத்த பிரமுகர்கள் சிலரும் இந்த ஒப்பந்தத்துக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியுள்ளனர் என்று கூறப்படுகின்றது.

பிறகென்ன? அடித்துப் பிடித்து, ஆரவாரத்துடன் தயாரான ஒப்பந்த நகலை அப்படியே கிடப்பில் போட - கிடாசித் தூக்கி எறிய - இலங்கை அரசுத் தலைமை தீர்மானித்துவிட்டதாகத் தெரிகின்றது.

இந்த ஒப்பந்த விவகாரத்தைச் செய்து முடிப்பதற்காக இந்திய வர்த்தக அமைச்சின் செயலாளர் சில வாரங்களுக்கு முன்னர் நேரடியாக இலங்கைக்கு வந்திருந்தார். இலங்கைத் தரப்பில் ஜி.எல்.பீரிஸ் போன்ற அமைச்சர்களும் கடுமையாக உழைத்தனர்.

ஆனால் இப்போது எல்லாம் வீண் என்றாகி விட்டது.

'சார்க்' மாநாட்டுக்காக இந்தியத் தலைவர்கள் இங்கு வந்திருக்கும் சமயத்தில் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டுமானால் அதற்கு முன்னர் - அடுத்த வாரம் - நடைபெறும் அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த ஒப்பந்தத்துக்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றாக வேண்டும்.

ஆனால், இந்த ஒப்பந்தத்துக்கு எதிராக - இந்திய விரோதப் போக்கோடு - பேரினவாதக் கட்சிகள் குரல் எழுப்பியிருப்பதால் -

அதனை மீறித் தனது முடிவை முன்னெடுக்கத் திராணியற்ற கொழும்பு அரசுத் தலைமை, மெல்ல இந்த ஒப்பந்த விவகாரத்தையே அடுத்த அமைச்சரவைக் கூட்ட நிகழ்ச்சி நிரலிலேயே சேர்க்காமல் அப்படியே விட்டு விடத்தீர்மானித்துள்ளது என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

இந்த ஒப்பந்த விடயத்தைத் தொடர்ந்தும் முன்னெடுத்து, 'சார்க்' மாநாடு சமயம் உடன்பாட்டில் கையெழுத்து வைக்கும் விருப்பமும், முடிவும் இலங்கை அரசுத் தலைமையிடம் இல்லையென்றால், சார்க் மாநாட்டுக்கு இலங்கைக்கு வரும் இந்திய அரசியல் தலைவர்களின் வரிசையில் இந்திய வர்த்தக அமைச்சர் இடம்பெறமாட்டார் என்றும் கூறப்படுகின்றது.

உத்தேச ஒப்பந்தம் சரியா, தவறானதா, அதனால் இலங்கைத் தீவுக்குப் பாதிப்பா, நஷ்டமா என்பவை எல்லாம் வேறு விடயம்.

ஆனால், சர்வதேச நாடு ஒன்றுடன் இத்தகைய ஒப்பந்தங்கள் போன்ற விடயங்களை முன்னெடுப்பது குறித்துப் பேசித் தீர்மானிக்க முன்னர், இங்குள்ள கள நிலைவரம், மக்கள் கருத்து நிலைப்பாடு, தனது வலிமை, அதை நிறைவு செய்வதற்கான தனது தகைமை, இயலும் தன்மை ஆகியவை குறித்தெல்லாம் அரசும் அதிகார வர்க்கமும் தீர்மானிக்க வேண்டும். அதன் பின்னர்தான் அதில் கால் வைக்கவேண்டும்.

அதைவிடுத்து, எடுத்த எடுப்பிலேயே கயிறு கொடுத்துவிட்டுப் பின்னர் பின்வாங்குவது அரச நிர்வாகத்தின் இயலாமையை - திறமையின்மையை - வெளிப்படுத்துவதாகும்.

தெளிவான கொள்கைத் திட்டமும், தீர்க்கதரிசனமான நோக்கும், உருப்படியான வழிகாட்டுத் தலைமையும் இல்லாத அரச நிர்வாகம் இப்படித்தான் விடயங்களை ஆரவாரமாக ஆரம்பித்து, கடைசியில் போட்டடிக்கும் என்பதற்கு இந்த விவகாரம் நல்ல உதாரணம்.

இப்படி விடயங்களை ஆரவாரமாக ஆரம்பித்துக் கையைச் சுட்டுக் கொண்டதும் 'எட்டாப்பழம் புளிக்கும்' என்பதுபோல பின்வாங்கவேண்டிய பல அனுபவப் பாடங்கள் இந்த அரசுத் தலைமைக்குக் காத்திருக்கின்றன என்பது நிச்சயம். காலம் வரும்போது நாம் அவற்றைக் கண்டு க(ளி/ழி)க்கலாம்.

## இந்திய மீனவர்கள் சுட்டுக்கொல்லப்படுகின்றமை குறித்து தமிழகக் கட்சிகள் மக்களுக்கு விளக்கம் அளிக்கவேண்டும்

தமிழகத்தில் உள்ள அத்தனை கட்சிகளும் இந்திய மீனவர்கள் சுட்டுக் கொல்லப்படும் சம்பவங்கள் தொடர்பில் மக்களுக்கு தன்னிலை விளக்கம் அளிக்க வேண்டும் என்று தமிழ்நாட்டிலிருந்து வெளிவரும் "தினமணி" நாளேடு வலியுறுத்தியுள்ளது.

நேற்று வெள்ளிக்கிழமை வெளிவந்த அந்நாளேட்டின் ஆசிரியர் தலையங்கத்திலேயே இவ்வாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கோடியக்கரை பகுதியில் இரண்டு தமிழக மீனவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கின்றனர். கடந்த 25 ஆண்டுகளில் சுமார் 800இற்கும் மேற்பட்ட மீனவர்களை சிங்களக் கடற்படையினர் சுட்டு வீழ்த்தியிருக்கிறார்கள்.

கடந்த இரண்டாண்டுகளில் மட்டும் கொல்லப்பட்டிருப்பவர்களின் எண்ணிக்கை 250இற்கும் மேல்.

தமிழக மீனவர்கள்மீது சிறிலங்கா இராணுவத்தினர் துப்பாக்கிச் சூடு நடத்துவதும், கைது செய்து இழுத்துச் செல்வதும், படகுகளையும் மீன்பிடிக்கும் சாதனங்களையும் சேதப்படுத்துவதும் கடந்த 35 ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

வேடிக்கை என்னவென்றால், பலமுறை சிறிலங்கா இராணுவத்தினர் நமது எல்லைக்குள் வந்து நமது மீனவர்களைத் தாக்கி இருக்கிறார்கள். உலங்கு வானூர்தியில் வந்து சுட்ட சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன. அவர்களைத் தாக்கவோ, தடுக்கவோ, அவர்களது உலங்குவானூர்தியைச் சுட்டுவீழ்த்தவோ இந்திய கடல் பாதுகாப்புப் படையினர் ஒரு தடவைகூட முயற்சி எடுக்காதது ஏன் என்பதுதான் புயாத புதிர்.

கச்சதீவை சிறிலங்காவுக்குத் தாரை வார்த்துக் கொடுக்கும் ஒப்பந்தம் கையெழுத்தானது 1974 ஆம் ஆண்டு.

அப்போது இன்றைய முதல்வர் கருணாநிதியின் தலைமையில்தான் தமிழகத்தில் ஆட்சி இருந்தது. திமுகவுக்கும், அப்போது மத்தியில் ஆட்சியில் இருந்த காங்கிரஸ் அரசுக்கும் சுமுகமான உறவு இருக்கவில்லை என்பது உண்மை.

ஆனால் அசுரப் பெரும்பான்மையுடன் ஆட்சியில் இருந்த தி.மு.க., இப்போது சேது சமுத்திரத் திட்டத்துக்காக உண்ணாவிரதம், ஆர்ப்பாட்டம், கடையடைப்பு என்று களமிறங்கியதுபோல கச்சதீவு பிரச்சினையில் தமிழக உரிமைக்காக வலிமையாகக் குரல் கொடுத்ததா என்றால் இல்லை.

"இந்திய மீனவர்கள் இன்றுவரை அனுபவித்து வரும் மீன்பிடிக்கும் உரிமை, இரு நாட்டுக் கடல் பகுதிகளிலும் படகுகள் செலுத்தும் உரிமை, கச்சதீவுக்குச் சென்று வரும் உரிமை ஆகியவை உறுதிப்படுத்தப்படுகிறது" என்று அன்றைய வெளியுறவுத்துறை அமைச்சர் சர்தார் ஸ்வரண்சிங் நாடாளுமன்றத்தில் உறுதி அளித்திருக்கிறார்.

வேடிக்கை என்னவென்றால், கச்சதீவில் இந்திய உரிமையைத் தாரை வார்த்துக் கொடுக்கிறோம் என்று அரசைக் கண்டித்து கேள்வி எழுப்பியவர் பின்னாளில் பிரதமரான அன்றைய ஜனசங்க உறுப்பினர்

### தினமணி நாளேட்டின் ஆசிரியர் தலையங்கம் வலியுறுத்துகின்றது

அடல் பிகாரி வாஜ்பாய். அவரது கேள்விகளுக்குத் தரப்பட்ட பதில்தான் மேலே குறிப்பிட்டது.

1976ஆம் ஆண்டு இன்னொரு ஒப்பந்தம் இரு நாட்டு வெளியுறவுச் செயலர்களால் கையெழுத்திடப்பட்டது. அதன்படி மேலே குறிப்பிட்ட உரிமையும் பறிக்கப்பட்டது. கச்சதீவு சிறிலங்காவிலிருந்து 10 கடல் மைல்கள் தூரத்திலும், இந்திய எல்லையிலிருந்து 12 கடல் மைல்கள் தூரத்திலும் இருக்கும் சிறிய தீவு. 2 மைலகளின் வித்தியாசத்தைக் காரணம் காட்டி சறிலங்கா அரசு அதற்கு உரிமை கோரிய போது, நமது ஆட்சியாளர்கள் அதைத் தாரைவார்த்துக் கொடுத்தது மிகப்பெரிய தவறு.

1989 இலும், 1996 இலும், 1999 இலும் மத்திய ஆட்சியில் பங்குபெற்ற திமுக, கச்சதீவு பிரச்சினையையும், தமிழக மீனவர்களின் உரிமையையும் தனது ஆதரவுக்கு விலையாகக் கேட்டிருக்குமேயானால், நிச்சயமாக இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படாவிட்டாலும், இந்திய அரசின் நிர்ப்பந்தங்கள் சிறிலங்கா அரசின் செயற்பாடுகளில் மாற்றத்தை ஏற்படுத்தி இருக்கும்.

என்னென்னவோ துறைகளைக் கேட்டுப் பெற்றவர்கள் வெளியுறவுத்துறையைக் கேட்டுப் பெற்று இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவுகோர ஏன் முனையவில்லை என்பது தி.மு.க. மட்டுமல்ல, மத்திய ஆட்சியில பங்குபெற்ற தமிழகத்தில் உள்ள அத்தனை கட்சிகளும் மக்களுக்கு அளிக்க வேண்டிய தன்னிலை விளக்கம்.

இந்தப் பிரச்சினையில் அதிமுக பொதுச் செயலாளரும், முன்னாள் முதல்வருமான ஜெயலலிதா, ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு அமைந்தபோது, பிரதமர் மன்மோகன்சிங்கிடம் கச்சதீவை இந்தியா ஏன் நிரந்தரக் குத்தகைக்கு எடுக்ககூடாது என்று யோசனை தெரிவித்திருந்தார். இப்போது முதல்வர் கருணாநிதி, கச்சதீவில் நமது உரிமைகளை மீட்பதற்கான தருணம் வந்துவிட்டதாகக் கருதுவதாகவும், தமிழர் ஒருவரை சிறிலங்கா தூதுவராக்க வேண்டும் என்றும் யோசனை கூறியிருக்கிறார்.

எங்கள் கட்சிக்காரரை வெளிவிவகாரத்துறை அமைச்சராக்குங்கள் என்றோ, கச்சதீவில் நமது உரிமையை மீட்போம் என்றோ சொல்ல அவருக்கு ஏன் துணிவு வரவில்லை என்று புரியவில்லை.

1974இல் கச்சதீவைத் தாரை வார்க்கும்போதோ, 1976இல் இந்தியா தனது உரிமைகளை விட்டுக்கொடுத்தபோதோ மத்திய அரசுடன் முதல்வருக்கும் தி.மு.கவுக்கும் சுமுகமான உறவு இருக்கவில்லை உண்மை.

ஆனால், இப்போது இருக்கிறதே! மத்தியில் ஆளும் கூட்டணியில் சர்வ வலமை படைத்த தோழமைக் கட்சியாக தி.மு.க. இருக்கிறதே! பிறகும் ஏன் அனைத்துலக உடன்பாடு என்று நழுவுகிறார்கள்?

தி.மு.கவோ, அதிமுகவோ, பாமகவோ, மதிமுகவோ, எதுவாக இருந்தாலும், தமிழக மீனவர்கள் இந்தியாவைச் சுற்றியுள்ள கடலில் மீன்பிடிக்கும் உரிமைக்கும் கச்சதீவின் மீது நமக்குள்ள உரிமைககும் உத்தரவாதம் அளிக்கப்பட்டால் மட்டும்தான், எந்தவொரு மத்திய அரசுக்கும் ஆதரவளிக்க வேண்டும். இல்லையென்றால், இவர்கள் தமிழ், தமிழன், தமிழர் நலன் என்று பேசுவதெல்லாம் வெறும் வாய்ப்பந்தல்தான்-என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தலைவர்கள் தங்கும் விடுதியிலேயே வெளிநாட்டுப் படையினர் பாதுகாப்பு

### அதற்கு வெளியில் இலங்கை இராணுவமே பொறுப்பு

கொழும்பு,ஜூலை19

சார்க் மாநாட்டில் கலந்துகொள்ளும் வெளிநாட்டுத் தலைவர்களின் பாதுகாப்புக்காக அவர்களுடன் வரும் பாதுகாவலர்கள் அத்தலைவர்கள் தங்கியிருக்கும் ஹோட்டல்களில் மாத்திரம்தான் பாதுகாப்பை வழங்கமுடியும் என்று இலங்கைப் பாதுகாப்புத் தரப்பு தெரிவிக்கின்றது.

வெளிநாட்டுத் தலைவர்களுக்கான முழுப் பாதுகாப்பையும் இலங்கை அரசே வழங்கும் என்றும் இந்த விடயத்தில் சர்வதேசம் தலையிட முடியாது என்றும் இலங்கைப் பாதுகாப்புத் தரப்பு மேலும் தெரிவிக்கின்றது.

தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிமால் மெதிவக்கவே மேற்படி தகவலை வெளியிட்டார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

சார்க் மாநாட்டில் கலந்துகொள்ளும் வெளிநாட்டுத் தலைவர்களுடன் அவர்களின் பாதுகாப்புப் படையினரும் இலங்கை வருவர்.

அந்தப் படையினரின் பாதுகாப்பு நடவடிக்கை மட்டுப்படுத்தப்பட்டதாகவே இருக்கும். அந்தத் தலைவர்கள் தங்கியிருக்கும் ஹோட்டல்களில் மாத்திரம்தான் அந்தப் பாதுகாவலர்கள் பாதுகாப்பை வழங்குவர்.

சார்க் மாநாடு இடம்பெறும் இடத்திலோ அல்லது வேறெந்த இடத்திலோ அந்தப் பாதுகாவலர்கள் பாதுகாப்பை வழங்க முடியாது.

வெளிநாட்டுத் தலைவர்களுக்கான முழுப் பாதுகாப்பையும் இலங்கைப் படையினரும் பொலிஸாருமே வழங்குவர்.

இதேவேளை, வெளிநாட்டுத் தலைவர்கள் தங்கவிருக்கும் ஹோட்டல்களிலும் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

எந்தவித பிரச்சினையுமில்லாமல் வெளிநாட்டுத் தலைவர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டு வருகிறது- என்றார். (சி)

## உபவாச ஜெப ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம்,ஜூலை19

யாழ்.கிறிஸ்தவ சபைகள் ஸ்தாபனங்களின் ஐக்கிய அமைப்பின் ஏற்பாட்டில் தேசத்தின் சமாதானத்திற்கான உபவாச ஜெப ஒன்றுகூடல் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது.

வட்டுக்கோட்டை எபினேசர் ஜெப ஆலயம், உடுவில் அப்போஸ்தல திருச்சபை, அச்சுவேலி நாற்சதுர சுவிஷேச சபை, தீவகம் ஜெப ஆலயம், யாழ்ப்பாணம் ஏ.ஓ.ஜி.திருச்சபை ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளது. (202)

## மாவட்ட மட்டத்தில் முதலிடம்


பரமசாமி நிலானி

யாழ்மாவட்டப் பாடசாலைகளின் மாணவர்களிடையே மாவட்ட மட்டத்தில் இடம்பெற்ற ஆங்கில உறுப்பெழுத்துப் போட்டியில் வண்ணை நாவலர் மகாவித்தியாலய தரம் 11 மாணவி பரமசாமி நிலானி முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டார்.

மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட இவர் அண்மையில் இடம்பெற்ற மாகாண மட்டப் போட்டியிலும் கலந்துகொண்டார்.

இவர் ஏற்கனவே நடைபெற்ற கோட்டம், வலய மட்டப் போட்டிகளிலும் இரண்டாம் இடத்தைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (50)

## நாளை

| | |
|---|---|
| ஆடி 05 | 20.07.2008 ஞாயிற்றுக்கிழமை |
| திதி: | துதியை பி.ப 03.33 வரை |
| நட்சத்திரம் : | அவிட்டம் |
| சுபநேரம் : | 09.01 - 10.31 |
| ராகுகாலம் : | 04.31 - 06.01 |

## சுதுமலை நாவலரில் நான்காம் ஆண்டு விழா

யாழ்ப்பாணம்,ஜூலை19

சுதுமலை நாவலர் பாலர் பாடசாலையின் நான்காம் ஆண்டு விழாவும், அரங்கத் திறப்பு விழாவும், நூல் வெளியீடும், பெரியோர் கௌரவிப்பும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சுதுமலை பேராயிரவர் அரங்கில் இடம்பெறவுள்ளன.

பாடசாலையின் அதிபர் இ.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் விசேட விருந்தினராக 'செஞ்சொற் செல்வர்' ஆறு.திருமுருகனும் பிரதம விருந்தினராக வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸும் கலந்துகொள்வர்.

இளைப்பாறிய மேலதிக அரச அதிபர் ச.துரைராசா, பண்டிதர் க.ஈஸ்வரநாதபிள்ளை, இளைப்பாறிய அதிபர் தி.அருட்பிரகாசப்பிள்ளை, இளைப்பாறிய பிரதி அதிபர் வே.தம்பாபிள்ளை ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர்.

சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் திருவுருவப்படம் திரைநீக்கம் செய்யப்படும். (1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சார்க்' பாதுகாப்புக் கெடுபிடிகளை பொறுக்கக் கோருகிறது படைத்தரப்பு

கொழும்பு, ஜூலை 19

''சார்க் மாநாட்டை முன்னிட்டு தலைநகர் கொழும்பில் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. மாநாட்டுக் காலத்தில் அடிக்கடி பிரதான வீதிகள் மூடப்படலாம், சோதனைகள், தேடுதல்கள் தீவிரமடையும். இதனைப் பொதுமக்கள் பொறுத்துக்கொண்டு பாதுகாப்புத் தரப்பினருக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.''

- இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் கொழும்பு மேற்கு, தெற்கு மற்றும் வட மேற்குப் பகுதிகளுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிமால் மெதிவக்க.

தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய பிரதிப் பொலிஸ் மா அதிபர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

கொழும்பில் நடைபெறவுள்ள சார்க் மாநாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான முன்னேற்பாடாக இந்த வருடம் மார்ச் மாதம் முதல் இம்மாதம் 25ஆம் திகதி வரை கொழும்பிலும் கொழும்பிற்கு வெளியிலும் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தப் பாதுகாப்பு நடைமுறை வெற்றி பெற்றுள்ளது. இதனைத் தொடர்ந்து சார்க் மாநாடு நடைபெறும் தினங்களில் பாதுகாப்பை மேலும் உறுதிப்படுத்துவதற்காக விசேட பாதுகாப்புத் திட்டங்கள் பல வகுக்கப்பட்டுள்ளன.

### அதிவிசேட பாதுகாப்பு வலயங்கள் நான்கு

அவற்றுள் ஒன்றாக கொழும்பிலும் கொழும்புக்கு வெளியிலும் இம்மாதம் 25ஆம் திகதி முதல் அடுத்த மாதம் 4ஆம் திகதிவரை நான்கு விசேட அதி உயர் பாதுகாப்பு வலயங்கள் அமைக்கப்படும்.

கொழும்பில் புறக்கோட்டையை அண்டிய அரச தலைவர்கள் தங்கவிருக்கும் நட்சத்திர ஹோட்டல்கள் உள்ள இடங்கள், சார்க் மாநாடு நடைபெறவுள்ள பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தை அண்டிய பகுதிகள், நாடாளுமன்றத்தை அண்டிய பகுதிகள் ஆகியவையும், கொழும்புக்கு வெளியே கட்டுநாயக் கவை அண்டிய பகுதிகளுமே புதிய விசேட அதி உயர்பாதுகாப்பு வலயங்களாகும். மேற்படி பகுதிகளுக்குள் 25ஆம் திகதி முதல் 29ஆம் திகதிவரை மக்கள் தாராளமாகப் பயணம் செய்யலாம். மக்களின் பயணத்திற்கு இடையூறு விளைவிக்கப்படமாட்டாது. ஆனால், அவர்கள் கடும் சோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

30 ஆம் திகதியில் இருந்து அடுத்த மாதம் 4 ஆம் திகதிவரை எம்மால் வழங்கப்படும் விசேட பாஸ் அனுமதியைப் பெற்ற வாகனங்கள் மாத்திரமே இப்பகுதிகளில் பயணிக்க முடியும்.

மிக முக்கியமான தெரிவு செய்யப்பட்ட வாகனங்களுக்கு மாத்திரமே பாஸ் அனுமதி வழங்கப்படும்.

இந்தப் பகுதிகளில் உள்ள அலுவலகங்களில் தொழில் புரிபவர்கள் தங்களது தேசிய அடையாள அட்டைகளையும் அலுவலக அடையாள அட்டைகளையும் படையினரிடம் காண்பித்த பின்பே உள்நுழைய அனுமதிக்கப்படுவர்.

இருப்பினும் அந்தந்த நிறுவனங்கள் ஊழியர்களின் பெயர்ப்பட்டியலை எம்மிடம் சமர்ப்பித்திருந்தால் மாத்திரமே இது சாத் தியப்படும்.

பாதுகாப்பு வலயப் பகுதிகளில் அமைந்திருக்கின்ற அலவலகங்கள் அனைத்திற்கும் நாம் இது தொடர்பாக அறிவித்திருக்கிறோம்.

### பாதைகள் மூடப்படும்

மாநாட்டில் கலந்துகொள்ளும் தலைவர்கள் மாநாட்டு மண்டபத்திற்கு ஹோட்டல்களில் இருந்து செல்லும்போதும் மாநாடு முடிந்து ஹோட்டல்களுக்குத் திரும்பும்போதும் பாதைகள் மூடப்படும்.

அதேபோல் புறக்கோட்டையில் இருந்து பம்பலப்பிட்டி வரையிலான ரயில் போக்குவர்த்து அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் நாலாம் திகதிவரை இடைநிறத்தி வைக்கப்படும்.

### ரயில்கள் புறக்கோட்டை வரா

உதாரணமாக, காலியில் இருந்துவரும் ரயில்கள் பம்பலப்பிட்டியில் நிறுத்தப்படும். அதில் வரும் பயணிகள் இறங்கி அரசால் சேவையில் ஈடுபடுத்தப்படும் விசேட பஸ்கள் மூலம் ரயில் டிக்கெட்டைப் பயன்படுத்தி புறக்கோட்டைக்கு வரமுடியும்.

அதேபோல் வேறு இடங்களில் இருந்து புறக்கோட்டை ரயில் நிலையத்தின் ஊடாகக் காலி செல்லும் பயணிகள் புறக்கோட்டையில் இறங்கி அதே அரச பஸ்கள் மூலம் பம்பலப்பிட்டிவரை சென்று அங்கிருந்து ரயிலில் செல்ல முடியும்.

அதேபோல் கட்டுநாயக்கவில் இருந்து வெளிநாட்டுத் தலைவர்கள் கொழும்புக்கு வரும் நேரத்தல் மாத்திரம் கட்டுநாயக்க முதல் கொழும்பு வரையான பிரதான வீதி மூடப்பட்டிருக்கும்.

குறிப்பாக கட்டுநாயக்கவில் இருந்து கொழும்பு வர சுமார் 20 நிமிடங்கள் எடுக்கும். பெரும்பாலும் 30 நிமிடங்கள் வரை அப்பாதை மூடப்பட்டிருக்கும்.

சார்க் மாநாடு இடம்பெறும் நாள்களில் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் இடம் பெற்றால் அது எமது நட்டுக்கு அபகீர் தியை ஏற்படுத்தித் தந்துவிடும். அதைத் தடுப்பதற்காகவே இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகள்செய்யப்படுகின்றன. இதற்கு மக்கள் முழு ஆதரவையும் வழங்க வேண்டும் - என்றார்.

(சி)

## வல்லையில் உப்பு விளைச்சல்

யாழ்ப்பாணம்,ஜூலை19

வல்லைக் கடல்நீரேரிப் பகுதியில் தற் போதைய சீதோஷ்ண நிலையால் பெரு மளவான உப்பு விளைந்துள்ளது. இவற்றைப் படையினரின் அனுமதியோடு ஏராளமான பொதுமக்கள் மூடை, மூடையாக அள்ளிச் செல்வதை காணக்கூடியதாகவுள்ளது.

தற்போது யாழ்.குடாநாட்டில் உப்புக்கு ஏற்பட்டுள்ள கிராக்கியைப் பயன்படுத்தி உடனடியாகவே இந்த உப்பினை சந்தைப்படுத்தும் முயற்சியி லும் சிலர் ஈடுபட்டு வருகின்றனர்.

தகுந்த சுத்திகரிப்பின்மையாலும் அயடின் போன்ற இரசாயனங்களின் சேர்க்கை இல்லாமலும் இவை விற்பனை செய்யப்பட்டால் அது பெரும் சுகாதார சீர்கேட்டை உண்டுபண்ணுமெனச் சுட்டிக்காட்டப்படுகின்றது. (202)

## நெல்லியடி ம.ம.வியில் கலைமகள் சிலை

கரவெட்டி,ஜூலை19

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் கலைமகள் சிலை அமைக்கப்பட்டுள்ளது.

இச்சிலையின் திரைநீக்க விழா நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வை.செல்வராஜா கலந்து கொண்டு சிலையைத் திரைநீக்கம் செய்துவைத்தார்.

தொடர்ந்து வித்தியாலய மண்டபத்தில் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

(202-70)


COMPUTER EXPRESS
Institute of Information Technology
167, Kasthuriyar Rd, Jaffna
Phone : 0212228250, 0777222422
ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்
Diploma in Hardware Engineering
Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault finding ❖ Repairing ❖ Servicing ❖ Software Installation ❖ Configuring ❖ Networking
Course Fee : 2000/=
Diploma in Video Editing
Video Mixing Software
❖ Adobe Photoshop ❖ Adobe Premier ❖ Cool3D Studio ❖ Pinnacle Studio ❖ VCD Cutter ❖ Capturing
Course Fee : 3000/=
Diploma in Graphic Designing
❖ Adobe Photoshop ❖ Corel DRAW ❖ Cool3D Studio ❖ Micro Media Flash
Course Fee : 2000/=
பிரபல கணனிக்கணக்கியல் மென்பொருள்........
Tally செய்முறைப்பயிற்சிகளுடன் கம்பனிகணக்குகளையும் உள்ளடக்கி.
வகுப்புக்கள் ஆரம்பம் : 21/07/2008 09.00AM



யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலய
முதல்வர் திரு.தம்பு கந்தையா அவர்களின்
மணிவிழா அழைப்பு

இடம்: பிரதான மண்டபம்
யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலம்
காலம்: 20.07.2008 ஞாயிறு மு.ப.9.00 மணி
தலைவர்: திருமதி செ.ஜெகநாதன்
(பிரதி அதிபர்,யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலம்)
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
விழாக்குழுவினர்.
(76444)



துயர் பகிர்கின்றோம்

எமது நிறுவனத்தின் பிரதிப் பணிப்பாளர்
பாலசுந்தரம் ஜெயக்குமார் அவர்களின்
அன்புத் தந்தை
கணபதிப்பிள்ளை பாலசுந்தரம்
அவர்கள் 17.07.2008 இல்
அமரத்துவமடைந்ததையிட்டு
துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில்
பங்கு கொள்வதோடு, அவர்களது
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களையும் தெரிவித்துக்
கொள்கின்றோம்.
IDM நிறுவன ஊழியர்கள்.
(76430)



அம்புலன்ஸ் சாரதி தேவை
சென்.ஜோன்ஸ் அம்புலன்சால் நடத்தப்படும் இரவு நேர அம்புலன்ஸ் சேவைக்கு சாரதி தேவை. A. Class சாரதி அனுமதிப்பத்திர தரத்தையுடையவராயும், 10 வருட அனுபவமுள்ளவராயும் இரவு வேளையில் அம்புலன்சைக் கொண்டு செல்லக்கூடிய தகுதியுடையவராயும் இருத்தல் வேண்டும்.
எதிர்வரும் 21.07.2008 திங்கட்கிழமை காலை 11.00மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலையில் இயங்கும் சென்.ஜோன்ஸ் அன்புலன்ஸ் காரியாலயத்தில் நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்கவும்.
அம்புலன்ஸ் தொடர்பு இலக்கம்:
பகல்: 021- 222 -3166 -060 -221 -4444
இரவு: 021- 222-5599- 060- 221- 4444
மாவட்ட ஆணையாளர்
சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ்.
(76435)



வீடு வாடகைக்கு தேவை
சர்வதேச பாடசாலை மானிப்பாயின்
சிறுவர் பாடசாலை
நடத்துவதற்கு யாழ்ப்பாண மாநகர
சபை எல்லைக்குள் வீடு
வாடகைக்குத் தேவை.
தொடர்பு: கோபி
தொ.பே.இல.
021 222 2450, 0777 146782
(76440)



கண்ணீர் அஞ்சலி

யாழ்.கன்னியர்மடம் மகாவித்தியாலயத்தில்
நீண்டகாலமாக ஆசிரியையாகவும் உப
அதிபராகவும் கடமையாற்றியவரும் எமது
பழைய மாணவியுமான
திருமதி மேரிதிரேசா ஜோஜினா
விமலதாஸ்
அவர்கள் 16.07.2008 அன்று காலமான
செய்தி அறிந்து ஆழ்ந்த
கவலையடைந்துள்ளோம். அன்னாரின்
பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்து அவரது ஆத்ம சாந்திக்காகப்
பிரார்த்திக்கின்றோம்.
அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்,
யா/ திருக்குடும்ப கன்னியர் மடம்.
(76436)



துயர் பகிர்கின்றோம்

எமது வித்தியாலய
ஆசிரியர்
திரு.பா.ஜெயரூபன்
அவர்களின் பாசமிகு
தந்தை
கணபதிப்பிள்ளை
பாலசுந்தரம்
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும்
அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்வதோடு, ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
பாடசாலைச் சமூகம்.




கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவனத்தின் சக
உத்தியோகத்தர்
பா.ஜெயச்சந்திரன்
அவர்களின் அன்புத்தந்தை
அமரர் கணபதிப்பிள்ளை
பாலசுந்தரம்
அவர்கள் 17.07.2008
வியாழக்கிழமை இறைபதம்
அடைந்ததையிட்டு அவரின்
பிரிவால் துயருற்றிருக்கும்
அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.
Manager & Staff,
Lanka Clear,
National Cheque Clearing House, Jaffna.
(சி/553806)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய அணியுடனான பயிற்சியாட்டம்:
# இலங்கை லெவன் 224 ஓட்டங்களுக்குள் ஆட்டமிழப்பு




கொழும்பு, ஜூலை 19

இந்திய அணியுடனான 3ஆம் பயிற்சியாட்டத்தில் தடுமாறிய இலங்கை லெவன் அணி தனது முதல் இன்னிங்ஸில் 224 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

தடுமாறிய அணியை தில்லான கண்டாம்பி தனது சிறந்த ஆட்டத்தால் கௌரவமான நிலைக்கு அழைத்துச் சென்றார். சிறப்பாக ஆடிய அவர் 84 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்து ஆட்டமிழந்தார்.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் ஆடிய இலங்கை லெவன் அணி ஆரம்ப நான்கு விக்கெட்டுகளையும் 82 ஓட்டங்களுக்குள் இழந்துவிட்டது. பின்னர் இணைந்த கண்டாம்பி - சமர சில்வா ஜோடி அணியைத் தூக்கி நிறுத்தியது. இந்த ஜோடி தம்மிடையே 100 ஓட்டங்களைப் பகிர்ந்திருந்த நிலையில் 84 ஓட்டங்களுடன் கண்டாம்பி, முனாப் பட்டேலின் வேகத்தில் ஆட்டமிழந்தார். சமர சில்வா 68 ஓட்டங்களுடன் ஹர்பஜனின் சுழலில் வீழ்ந்தார்.

இறுதியில் இலங்கை லெவன் அணி 224 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுகளையும் இழந்தது. கும்ளே 3 விக்கெட்டுகளையும், சஹீர் கான், ஹர்பஜன் சிங் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும், இஷாந்த் சர்மா, முனாப் பட்டேல் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இந்திய அணி ஆரம்ப வீரரான கௌதம் கம்பீரை 4 ஓட்டங்களுடன் டில்காரவின் வேகத்தில் இழந்தது. இந்திய அணி ஒரு விக்கெட் இழப்புக்கு 4 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது முதல் நாள் ஆட்டம் போதிய வெளிச்சமின்மை காரணமாக நிறுத்தப்பட்டது. இன்று இரண்டாம் நாள் ஆட்டம் தொடரும்.




## மெண்டிஸை விட முரளியே ஆபத்து!
### சொல்கிறார் ஹர்பஜன்

கொழும்பு, ஜூலை 19

சுழல்பந்துவீச்சில் புதிய அவதாரமான அஜந்த மெண்டிஸை விட முரளிதரன்தான் மிகவும் அபாயகரமானவர் என ஹர்பஜன் வர்ணித்திருக்கின்றார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியிருப்பவை வருமாறு:-

''மெண்டிஸின் பந்துவீச்சு அற்புதமாக இருக்கிறது. இது போன்ற மந்திரப் பந்துவீச்சை டெனிஸ் பந்துகளில் செய்தவர்களை பார்த்திருக்கிறேன். ஆனால், கிரிக்கெட் பந்திலும் இதைச் சாதிக்க முடியும் என அவர் நிரூபித்துள்ளார். அவரிடம் இருந்து கற்றுக்கொள்ள வேண்டியது நிறைய இருக்கிறது.

மெண்டிஸ் சிறந்த பந்துவீச்சாளராக இருந்தாலும் டெஸ்ட் தொடரில் முரளிதரன்தான் இந்திய அணிக்கு சவால் தரக்கூடியவர். மெண்டிஸை முரளியுடன் ஒப்பிட முடியாது. மெண்டிஸ் இப்போதுதான் பந்துவீச்சில் கலக்கத் தொடங்கியிருக்கிறார். ஆனால், முரளி பல ஆண்டுகளாக சாதித்து வருகிறார். - இவ்வாறு ஹர்பஜன் தெரிவித்தார்.

## டெஸ்ட் போட்டிகளைத் தவிர்ப்பதா? டோனி மீது ரணதுங்கா குற்றச்சாட்டு

சென்னை, ஜூலை 19

''கிரிக்கெட் போட்டிகளில் தொடர்ந்து பங்கேற்பதால் மிகவும் சோர்வாக இருப்பதாக கூறி சிலர் டெஸ்ட் போட்டிகளைத் தவிர்க்கிறார்கள். பண மழை பொழியும் ஐ.பி.எல். என்றால் மட்டும் இவர்கள் சோர்வடைவதில்லை.'' - என இலங்கை முன்னாள் அணித்தலைவர் அர்ஜுனா ரணதுங்கா ஆவேசமாகக் கூறியுள்ளார். ஓய்வு எடுத்துக் கொண்ட டோனியை மறைமுகமாகச் சாடியுள்ளார்.

இது பற்றி அவர் சென்னையில் செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு:- உலகளவில் சிறந்த துடுப்பாட்ட வரிசையைக் கொண்ட இந்திய அணியுடன் விளையாடுவது சவாலான ஒன்றுதான். இருப்பினும் எங்கள் அணியில் பல்வேறு சாதனைகள் படைத்த முரளி, இளம் வீரர் அஜந்த மெண்டிஸ், ஜெயசூரியா, சங்ககார என பலரும் உள்ளனர். இந்திய அணியை ஜெயிக்க முழுப் பலத்தையும் காட்டவுள்ளோம். இந்திய அணியின் முன்வரிசைத் துடுப்பாட்ட வீரர்களை விரைவில் பவிலியன் அனுப்பத் திட்டமிட்டுள்ளோம்.

டெஸ்ட் போட்டிகளை மீட்க வேண்டியது அவசியம். ஒரு சில வீரர்கள், 'டெஸ்ட் போட்டிகளால் விரைவில் களைப்படைந்து விடுகிறோம்' எனக் கூறுவர். அது தவறானது. என்னைப் பொறுத்தவரை ஆண்டுக்கு அதிகபட்சமாக 35 ஒருநாள் போட்டிகள் மற்றும் 15 டெஸ்ட் போட்டிகளில் ஒரு வீரர் தாராளமாகப் பங்கேற்கலாம். ஒரு ஆண்டில் எவ்வளவு போட்டிகளில் விளையாட முடியும் என்பதை இதுவரை எந்த ஒரு வீரரும் பரிந்துரை செய்யாதமை துரதிஷ்டவசமானது. டெஸ்ட் போட்டிகளில்தான் தங்களது முழுத் திறமையையும் காட்ட முடியும். - இவ்வாறு ரணதுங்கா கூறினார்.

## ஓவரின் 6 பந்து வீச்சுகளிலும் வித்தியாசத்தைக் காட்டுவேன்
### மெண்டிஸ் பேட்டி

சென்னை, ஜூலை 19

ஓர் ஓவரின் ஆறு பந்துவீச்சுகளிலும் வித்தியாசத்தைக் காட்டும் விதத்தில் பந்துவீசவுள்ளேன் என இலங்கை அணியின் புதுவரவான அஜந்த மெண்டிஸ் கூறியுள்ளார்.

சென்னையில் நேற்றுமுன்தினம் நடந்த நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்டிருந்த மெண்டிஸ், செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு:-

ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் இறுதியாட்டத்தில் 6 விக்கெட்டுகளை வீழ்த்தியதால் என் மீதான எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது. ஒருநாள் போட்டிகளிலிருந்து டெஸ்ட் கிரிக்கெட் முற்றிலும் மாறுபட்டது. டெஸ்ட் கிரிக்கெட்டுக்கு நான் புதியவன்.

தற்போது நான் ஒரு ஓவரில் 5 விதமாகப் பந்துவீசி வருகிறேன். இப்போது 6ஆவது பந்திலும் வித்தியாசத்தைக் காட்டும் வகையில் முயற்சி மேற்கொண்டுள்ளேன். முரளிதரன் எனக்கு முன்னோடி மாதிரி. அவருடன் இணைந்து பந்து வீச விரும்புகிறேன்.



முரளிதரனுடன் சேர்ந்து இந்திய முன்னணித் துடுப்பாட்ட வீரர்களான சச்சின் டெண்டுல்கர், ராகுல் டிராவிட், சௌரவ் கங்குலி, வி.வி.எஸ் லக்ஸ்மன் ஆகியோருக்குப் பந்து வீசுவது எனக்குக் கிடைத்த கௌரவமாகும். டெண்டுல்கரின் விக்கெட்டைக் கைப்பற்ற வேண்டும் என்ற ஆசை உள்ளது. இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை ஆவலுடன் எதிர் நோக்கி உள்ளேன். - இவ்வாறு மெண்டிஸ் கூறினார்.

# வளைகுடா போரின் பின் முதன்முறையாக ஈராக்கிற்கான குவைத் தூதுவர் நியமனம்

குவைத், ஜூலை 19

குவைத்துக்கும் ஈராக்கிற்குமிடையே நிலவி வந்த பகைமை உணர்வு நீங்கத் தொடங்கியுள்ளது. இரு நாடுகளும் இராஜிக உறவு கொள்ள முன்வந்துள்ளன. இதற்கு முதற்படியாக, வளைகுடா போரின் பின்னர் ஈராக்கிற்கான முதல் குவைத் தூதுவரின் பெயரை, குவைத் வியாழக்கிழமை அறிவித்துள்ளது.

1991 ஆம் ஆண்டு, அப்போதைய ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசைன் குவைத் மீது படையெடுத்தார். ஈராக்கின் ஒரு பகுதியே குவைத் என்றும் அது தனிநாடல்ல என்றும் அவர் வாதிட்டார். இப்படையெடுப்பு முதல் இரு நாடுகளுக்குமிடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டுவந்தது. பகைமை உணர்வு தலைதூக்கி வந்தது.

சமீபத்தில் லெபானிய அரசில் பெரும்பான்மை வகிக்கும் சுனி முஸ்லிம் கட்சித் தலைவர் ஈராக்கிற்கு விஜயம் செய்தார். ஈராக்கிய ஷியா பிரதமரான நூரி அல்- மாலிகியைச் சந்தித்துப் பேசினார். இச்சந்திப்பில் மதப் பிரிவினைவாதங்கள் இப்பிராந்தியத்தில் கைவிடப்பட வேண்டுமென்றும், அயல் அரேபிய நாடுகளுடன் ஈராக் நல்லுறவு கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

லெபானிய சுனி முஸ்லிம் கட்சித் தலைவரின் முயற்சியால், குவைத்துக்கும் ஈராக்கிற்குமிடையிலான பகைமை உணர்வு நீங்கத் தொடங்கியுள்ளது. ஈராக்கிய ஷியா பிரதமர் மாலிகியை தனது கைப்பாவையாக மாற்ற ஷியாக்களின் ஆதிக்கத்திலுள்ள ஈரான் முனைகிறது என்ற சந்தேகம், சுனி அரேபியத் தலைவர்கள் மத்தியில் எழுந்தள்ளது.

ஈரான் இப்பிராந்தியத்தில் இராஜிக உறவுகளை ஏற்படுத்திக் கொள்வதில் கண்ணும் கருத்துமாய் இருக்கிறது. சுனி முஸ்லிம்களின் வலுவான ஆதிக்கத்தின் கீழ் உள்ள எகிப்து, சவூதி அரேபியா ஆகியவை உட்பட பலநாடுகள் மீது மேலாதிக்கம் செலுத்த ஈரான் நப்பாசை கொண்டுள்ளது என்ற குற்றச்சாட்டும் இவர்கள் மத்தியில் உண்டு.

ஈராக்கில் குவைத்துக்கான தூதுவராக ஓய்வு பெற்ற லெப்டினண்ட் ஜெனரல் அலி அல்-மோமன் பதவியேற்கவுள்ளார். இவர் இராணுவ அதிகாரிகளின் முன்னாள் தலைமையதிகாரியுமாவார் என குவைத் உத்தியோகபூர்வ செய்தி முகவர் நிறுவனம் தெரிவித்தது.

1990 ஆம் ஆண்டு குவைத்மீது, சதாம் ஹுஸைன் படையெடுத்தார். இதையடுத்து ஈராக்கில் இயங்கி வந்த தனது தூதரகத்தை குவைத் மூடியது. ஈராக்கியப் படைகள் குவைத்தை விட்டு வெளியேற மறுத்தன. 1991 ஆம் ஆண்டு, அமெரிக்கப் படைகளின் தலையீட்டால் இப்படைகள் வெளியேறின.

அதேவேளை, ஈராக்கில் பாதுகாப்பான பகுதியொன்றிலேயே தனது தூதரகத்தை மீளத் திறக்க குவைத் முன்வந்துள்ளது. ஈராக்கின் தலைநகரான பக்தாத்தில் தங்க பாதுகாப்பு இருக்காது என்ற கலக்கம் குவைத்தை விட்டு நீங்கவில்லை என ஓர் அதிகாரி குறிப்பிட்டார்.




## 90ஆவது அகவையை மண்டேலா நேற்றுக் கொண்டாடி மகிழ்ந்தார்

ஜொகன்னஸ்பேர்க், ஜூலை 19

தென்னாபிரிக்க முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா நேற்று தனது 90ஆவது பிறந்த நாளைக் கொண்டாடினார். இதையொட்டி அவர் பிறந்த கிராமமான குனுவிலில் உற்சாகமான கொண்டாட்டங்கள் நடைபெற்றன.

தென்னாபிரிக்கத் தலைவரான மண்டேலா இனவேறுபாட்டுக்கு எதிராக நடத்திய போராட்டத்திற்காக 30ஆண்டுகள் சிறைத் தண்டனை அனுபவித்தார். 1990ஆம் ஆண்டு விடுதலை செய்யப்பட்ட அவர், 1994ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் வெற்றிபெற்று தென்னாபிரிக்காவின் ஜனாதிபதியாகப் பதவியேற்றார்.

பதவிக்காலம் முடிவடைந்த பின்னர் ஏழ்மை, கல்லாமை மற்றும் எய்ட்ஸிலிருந்து மீள் வாழ்க்கை ஆகியவற்றுக்காகத் தொடர்ந்து பணியாற்றி வருகின்றார்.

அவரது 90ஆவது பிறந்த நாள் நேற்றுக் கொண்டாடப்பட்டது. இதையொட்டி தென்னாபிரிக்கா முழுவதும் பாடசாலைகள், கல்லூரிகள் அவரது பிறந்த நாள் விழாவை உற்சாகமாகக் கொண்டாடின.

தென்னாபிரிக்காவின் தென் கிழக்கே உள்ள குனு என்ற தனது சொந்தக் கிராமத்தில் தனது குடும்பத்தினர் மற்றும் உறவினர்களுடன் மண்டேலா பிறந்தநாளைக் கொண்டாடினார். இதனால் அந்தக் கிராமம் முழுவதும் விழாக்கோலம் பூண்டிருந்தது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## ஆப்கான் சிறையிலிருந்து தப்பியோடிய தலிபான்கள் இந்தியாவுக்கு ஆபத்து
### சர்வதேச பொலிஸ் எச்சரிக்கை

புதுடில்லி, ஜூலை 19

ஆப்கானிஸ்தான் சிறையிலிருந்து தப்பியோடிய 238 தலிபான் தீவிரவாதிகளால் இந்தியாவுக்கு ஆபத்து ஏற்படும் - என்று சர்வதேச பொலிஸ் எச்சரிக்கை விடுத் துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவின் உயர் புலனாய்வு அமைப்பாக இருக்கும் சி.பி. ஐக்கு, சர்வதேச பொலிஸிடம் இருந்து அவசர எச்சரிக்கை வந்துள்ளது. அதில், காந்த கார் சிறையில் இருந்து தப்பிய 238 கொடிய தலிபான் தீவிரவாதிகள், இந்தியாவுக்குள் ஊடுருவி நாச வேலைகளில் ஈடுபடலாம் என்று கூறப்பட்டு இருக்கிறது.

சர்வதேச பொலிஸின் இந்த எச்சரிக்கை பற்றி உள்துறை அமைச்சின் செயலாளருக்கு சி.பி.ஐ. உடனடியாக தகவல் தெரிவித்தது. அதைத் தொடர்ந்து டில்லியில் உயர்மட்ட ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. 'சறா' மற்றும் உளவுப்பிரிவைச் சேர்ந்த மூத்த அதிகாரிகள், உள்துறை அமைச்சக அதிகாரிகள், சி.பி.ஐ. அதிகாரிகள் இதில் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் சர்வதேச பொலிஸிடம் இருந்து வந்துள்ள எச்சரிக்கை பற்றி தீவிர ஆலோசனை நடைபெற்றது. அப்போது சிறையில் இருந்து தப்பிய தலிபான் தீவி ரவாதிகள் பற்றிய விவரங்களைச் சேகரிக் கும்படி சி.பி.ஐக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. [illegible] களும் எடுக்கப்பட்டன.

## ஆப்கானுக்கு கூடுதல் படைகளை அனுப்புவதற்கு அமெரிக்கா முடிவு

வாஷிங்டன், ஜூலை 19

ஆப்கானிஸ்தானில் பயங்கரவாதச் செயல்களின் எண்ணிக்கை அதிகரித்துவருகின்றமையால், அதை அடக்குவதற்கு கூடுதல் இராணுவ வீரர்களை அங்கு அனுப்புவதற்கு அமெரிக்கா முடிவுசெய்துள்ளது.

அமெரிக்க நட்பு நாடுகளின் இராணுவக் கூட்டணியை (நேட்டோ) சேர்ந்த 53 ஆயிரம் இராணுவ வீரர்கள் ஆப்கானிஸ்தானில் பணியில் ஈடுபட்டுள்ளார்கள். இவர்களில் 17,500 வீரர்கள் அமெரிக்க இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள். இவர்கள் தவிர 18500 அமெரிக்க இராணுவ வீரர்கள் தனியாக ஆப்கானிஸ்தானில் நிறுத்தப்பட்டுள்ளனர்.

சமீபகாலத்தில் ஆப்கானிஸ்தானில் தீவிரவாதிகளின் செயல்பாடுகள் அதிகரித்திருப்பதால், அவர்களை அடக்குவதற்கு கூடுதல் இராணுவம் தேவை என்று அமெரிக்க இராணுவ வீரர்கள், தங்கள் நாட்டு இராணுவத் தளபதிக்கு தகவல் கொடுத்துள்ளனர். இதை ஏற்று கூடுதல் இராணுவத்தை அனுப்ப அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.

இதுபற்றி அமெரிக்க இராணுவ அமைச்சர் றொபேட் கேட்ஸ் செய்தியாளர்களிடம் கூறுகையில், ''ஆப்கானிஸ்தானுக்கு கூடுதல் இராணுவத்தை விரைவில் அனுப்புவதற்கு [illegible] எடுத்து வருகிறோம். கூடுதல் இராணுவத் தேவை இருப்பதை நாங்கள் உணர்ந்து இருக்கிறோம்''- என்று தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தண்டவாளத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அகற்றுவதற்குரிய உயர் நீதிமன்ற இடைக் காலத் தடை உத்தரவு குறித்து நகர அபி விருத்தி அதிகார சபைக்கு எந்தவிதமான அறிவிப்பும் கிடைக்கவில்லை என்று நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவரான ராமானுஜம் தெரிவித்தார். (அ)

## ஐ.நா.மனித...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆர்பர் அம்மை யாரின் இடத்து க்கே நியம னம் செய்யப்பட் டுள்ளார்.

திருமதி பிள்ளை கடந்த 2003 ஆம் ஆண்டு முதல் அனைத் துலக குற்றவியல் நீதிமன்ற நீதிபதி யாகப் பணியாற்றி வரு கிறார்.

றுவாண்டா இனப்படு கொலை தொடர் பான விசாரணைகளின் போது பாலியல் வல்லுறவு என்பது போரில் பயன்படுத் தப் படுகின்ற ஒரு நிறுவனமயப்படுத் தப் பட்ட ஆயுதம் என்றும் அது ஒரு இனப் படு கொலைக் குற்றமே என்றும் வரலாற் றுச் சிறப்புமிக்க தீர்ப்புக்களை அறிவித்தவர் திருமதி நவநீதம் பிள்ளை.

1941ஆம் ஆண்டு தென்னாபிரிக்கா வில் பிறந்த தமிழர் ஆவார். 1967ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவின் நட்டால் மகாணத்தின் முதலாவது பெண் சட்டத் தரணியாக அவர் பணியாற்றத் தொடங்கினார். இவரது தந்தை தென்னாபிரிக்காவின் தலைநகர் டேர்பனில் பஸ் சாரதியாக பணி புரிந்தவர். (சி)

## முல்லைத்தீவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளர்கள் கரைவலை வளைப்பதில் ஈடுபட் டுக்கெண்டிருந்தபோது நேற்று வெள்ளிக் கிழமை காலை 6.30 மணியளவில் வான் படையின் கிபிர் ரக விமானங்கள் குண்டுத் தாக்குதலை நடத்தியுள்ளன.

இத்தாக்குதலில் அந்த இடத்தில் தொழி லில் ஈடுபட்டுக்கொண்டிருந்த நான்கு படகுகள் கடும் சேதங்களுக்குள் ளாகியுள்ளன.

தொழிலில் ஈடுபட்டிருந்த ஒரு பிள்ளையின் தந்தையான கஜமோகன் (வயது - 25) தலையில் காயமடைந்தார். நான்கு கரைவலைத் தொழிற் பொருள்களும் சிதைந்துள்ளன. அப்பகுதியில் உள்ள நான்கு வீடுகளும் சேதமடைந்துள்ளன. (த)

## கழுத்து நெரித்து..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பருத்தித்துறை, தம்பசெட்டியில் இந் தக் கொடூரக் கொலை நடைபெற்றுள்ளது. ஆறுமுகம் தங்கவடிவேல்(வயது83) என் பவரே படுகொலை செய்யப்பட்டவரா வார். நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பி.ப. 2மணியளவில் இந்தச் சம்பவம் நடை பெற்றதாகச் சொல்லப்படுகிறது.

ஓய்வு பெற்ற அரச ஊழியரான இவர் தனி மையில் வீட்டில் வாழ்ந்து வந்தார். அவரது மகன் வெளிநாட்டில்வசிக்கிறார்.

இந்த மரணம் தொடர்பாக பருத்தித் துறை மேலதிக நீதிவான் எஸ்.அலெக் ஸ்ராஜா சம்பவ இடத்தில் விசாரணை களை நடத்தினார்.

கொலையுண்ட வயோதிபர், தனித்து வாழ்ந்து வந்தார் என்றும், அவரது நடமாட் டத்தை இரண்டு நாள்களாகக் காணாத உறவினர்கள் அவ ரது வீட்டுக்குப் போய் பார்த்த போது எரிந்த நிலையில் அவர் சடலமாக காணப்பட்டார் என்றும் விசார ணையில் தெரி விக்கப்பட்டது. இவர் அதிக பெறு மதியுள்ள கழுத்துச் சங்கிலியை அணிந் திருந்தவர் என்று சொல்லப்படுகி றது. சடலத்தின் கழுத்து நெரிக் கப் பட்ட அடையா ளம் காணப் பட்ட தைய டுத்து, யாழ். ஆஸ் பத்தி ரியில் சட்ட வைத்திய அதி காரி மூலம் பிரேத பரி சோதனை செய்து அறிக்கை சமர்ப்பிக் குமாறு நீதிவான் பொலிஸாருக்கு உத்தர விட்டார். (அ-218)

## விடுதலைப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கே ஜனநாயகத்தை நிலைநாட்டுவ தற்காகவே படை நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகிறோம்.

தற்போது புலிகளை மூன்றில் இரண்டு வீதத்திற்கு வெற்றிகண்டிருக்கிறோம். புலி களுடனான போரில் முழுமையாக வெற் றியீட்டுவதற்கு இன்னும் இரண்டு வருடங் கள் தேவை. அதற்கான படை நடவடிக் கைகள் தற்போது தொடர்ந்துகொண்டிருக்கின்றன.

சிங்களவர் மத்தியில் ஊடுருவியுள்ள புலிகள்

கிழக்கில் 2006ஆம் ஆண்டு படை நடவடிக் கையை மேற்கொண்ட நாம் அதில் வெற்றி பெற்றோம். தற்போது அங்கே தேர்தல் நடத் தப்பட்டு ஜனநாயகம் தோற்றுவிக்கப்பட் டுள்ளது. அங்கு இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்தியுள்ளோம்.

தற்போது புலிகள் இயக்கத்தில் 1000 பேரே உள்ளனர். அவர்கள் மிகவும் பல வீன மடைந்து விட்டனர். எஞ்சியுள்ள புலிக ளுக்கு அவர்களின் தலைவர்கள் வாக்குறு திகள் பலவற்றை வழங்கியுள்ளனர். அத் தகைய உறுதி மொழிகளில் முழு இலங் கையையும் கைப்பற்றப் போவதாகவும் அவர்கள் கூறியிருக்கின்றனர் என்று தெரியவந்துள்ளது - என்றார் இராணுவத் தளபதி. (அ-சி)

## மன்னார் படை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆறு பேர் காணாமல்போயுள்ளனர் எனத் தெரி விக்கப்படுகிறது.

துணுக்காய் ஒட்டங்குளத்தில் வீட்டுப் பொருள்களை ஏற்றவென சென்று, காணா மல் போன கிளிநொச்சி சேவியர் கடையைச் சேர்ந்த க.இந்திரநாதன் என்பவரே படையி னரால் கொல்லப்பட்டுள்ளார். இவரது சட லத்தை படையினர் செஞ்சிலுவைச் சங்கக் குழு ஊடாக ஒப்படைத்துள்ளனர்.

இவரது சடலத்தில் கழுத்தில் வெட்டுக் காயமும், நெஞ்சில் சூட்டுக்காயங்களும் காணப்பட்டன என வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகம் தெரிவித்துள்ளது.

## கதறி அழுது மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு, கொம்பனி வீதியில் சட்ட அனுமதியின்றிக் கட்டப்பட்டவை என்று கூறப் படும் பல நூற்றுக்கணக்கான வீடுகளை இடித்து அகற்றப்போவதாக மாத ஆரம்பத்தில் அறிவித்திருந்த அரசு, அப்பகுதி மக்களை ஜூலை 17ஆம் திகதிக்கு முன்னர் தத்தமது வீடுகளில் இருந்து வெளியேறிவிடவேண் டும் என்றும் உத்தரவிட்டிருந்தது.

எனினும் அந்த உத்தரவை ஏற்கமறுத்த அக்குடியிருப்பாளர்கள் தொடர்ந்தும் அப் பகுதியிலேயே வசித்து வந்தனர்.

இந்த வீடுகளை இடிப்பதற்கான அங் கீகாரத்தைக் கொழும்பு மாவட்ட நீதிமன்றத் தில் அரசு பெற்றிருந்ததாகவும் கூறப்படுகின் றது.

அரசு உத்தரவுக்குக் கட்டுப்பட்டு அந்த வீடுகளில் இருந்து வெளியேறுவதற்கு அப் பகுதி மக்கள் மறுத்தமையினால் அவர்களுக் கும் அரசுப் பிரதிநிதிகளுக்கும் இடையில் முறுகல் ஏற்பட்டிருந்தது.

### உயர் நீதி மன்றத்தில் மனு

இந்நிலையில் தங்கள் வீடுகளை உடைக்க அரசு எடுக்கும் எத்தனத்துக்கு எதி ராக அப் பகுதி மக்கள் நேற்று உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்றைத் தாக்கல் செய்தனர்.

1960 ஆம் ஆண்டு முதல் இப்பகுதியில் வசித்துவரும் 353 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் ஆயிரத்து 800 பேரை இப்பகுதியில் உள்ள வீடுகளில் இருந்து வெளியேற்று வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின் றன என அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மனுவில் பாதுகாப்பு அமைச்சின் செயலா ளர், தேசிய வீடமைப்பு அதிகாரசபை, நகர அபிவிருத்தி அதிகாரசபை, காணிச்சீர்திருத்த அதிகாரசபை, கொழும்பு மாநகரசபை ஆகிய தரப்புகள் எதிர்மனுதாரர்களாகப் பெயர் குறிப் பிடப்பட்டிருந்தன.

இந்த மனு உயர்நீதிமன்றத்தில் நீதியரசர் கள் அசோக சில்வா,கே.ஸ்ரீபவன், பி.ஏ.இரத் தினாயக்கா ஆகியோர் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது சட்டத்தரணி உபுல் ஜயசூரிய மனுதாரர்கள் சார்பில் ஆஜ ராகி வாதாடினார்.

அவரது வாதத்தை செவிமடுத்த நீதியரசர் கள் எதிர்மனுதாரர்களுக்கு நோட்டீஸ் உத்தரவு பிறப்பித்ததுடன், எதிர்வரும் 22 ஆம் திகதி - செவ் வாய்க்கிழமை வரை - வீடு களை இடிப்பதைத் தடை செய்து இடைக் காலத் தடைக் கட்டளையும் வழங்கினர்.

### நீதிமன்றத் தடை செய்து உத்தரவு

நீதிமன்றத்தின் இந்தத் தடை உத்தரவு குறித்து எதிர்மனுதாரர்களுக்குத் தகவல் தெரிவிக்கும் பொறுப்பை நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த அரச சட்டத்தரணி நீதிமன் றில் ஏற்றுக்கொண்டார்.

எனினும், நீதிமன்றத் தடை உத்தரவு பற்றிய செய்தி வெளியாகிய கையோடு, வீடு களை உடைக்கும் முயற்சி திடீரெனத் தீவி ரப்படுத்தப்பட்டது.

பலநூற்றுக்கணக்கில் பொலிஸாரைக் குவித்து, அவர்கள் பாதுகாப்பு வழங்க, நகர அபிவிருத்தி அதிகாரசபையின் புல்டோஸர் இயந்திரங்கள் அழிப்புப் பணியை முடுக்கி விட்டன.

இதனால் குடியிருப்பு மக்கள் சீற்றமடைந் தனர். நீதிமன்றத் தடை உத்தரவு பற்றிய தகவலை எழுத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரி களுக்கு ஒப்படைக்க சட்டத்தரணிகள் அப் பகுதிக்கு வந்தபோது நிலைமை மேலும் மோசமடைந்தது.

வீடுடைப்பைத் தடுக்க முயன்ற வீட்டுக் காரர்கள் நையப் புடைக்கப்பட்டனர். பதிலுக்கு குடியிருப்பு மக்கள் கற்களை வீசி எறிந்து தாக்கினர்.

### கண்ணீர் புகைக்குண்டு வீச்சு

பொலிஸார் குண்டாந்தடியடிப் பிரயோக மும், கண்ணீர்ப் புகைக்குண்டு வீச்சும் மேற் கொண்டு மக்களைத் துரத்தியடித்தனர். பலர் கைது செய்யப்பட்டனர்.

இந்தக் களேபரங்களைப் படம்பிடித்த ஊடகவியலாளர்களும் பொலிஸாரினாலும் வீடுடைப்பில் ஈடுபட்டிருந்த அரசு ஊழியர் களாலும் தாக்கப்பட்டனர்.

இத்தாக்குதலில் காயமடைந்த 'டெய்லி மிரர்' பத்திரிகையின் படப்பிடிப்பாளர் யொஹான் பெரேரா கொழும்பு தேசிய வைத்தி யசாலை யில் சேர்க்கப்பட்டார்.

இடிக்கப்பட்ட வீடுகளில் கிடந்த உடை மைகள், சொத்துக்கள் ஆங்காங்கே வீசப் பட்டு, இறைந்து கிடக்கின்றன. பலரின் பொதிகள் அருகிலுள்ள ரயில்வே பாதையில் சிதறிக் கிடந்தன.

இப்பதற்றத்தினால் அப்பகுதி ஊடான கரையோர ரயில்சேவை நேற்றுப் பகல் தடைப்பட்டது.

வீடு, வாசல்களை இழந்து நிர்க்கதியான மக்கள் அப்பகுதியில் வெட்டவெளித் தரை யில் சோகமே உருவாகத் தமது எஞ்சிய உடைமைகளுடன் ஆங்காங்கே உட்கார்ந்தி ருந்தமையையும் காணமுடிந்தது. (உ)


இதோ உங்களுக்காக...!

MP4 PLAYERS Orange 8,750/-
• 2 GB (Expand 2 GB) • FM Radio • MP3 • Games • Voice Recording • USB Cable • Power Charger • Head Phone • Driver CD

MP3 PEN DRIVE Orange 6,250/-
• 1 GB (Data) • FM Radio • MP3 • USB Cable • Voice Recording • Head Phone

• 1 GB • FM Radio • MP3 • USB Cable • Head Phone 4,750/-

MP3 / FM Radio Player for Vehicles 3,800/-

HP Note Book (Laptop) 89,000/-
Processor : Intel Core 2 Duo 2.16 GHz RAM : 1GB DDR2
HDD : 120GB Screen : 15" 4' WXGA TFT VGA : 224MB
DVD/RW Double Layer / WiFi / Bluetooth / Card Reader / Bag

MOTHER BOARD (Three Year Warranty)
ECS EliteGroup 945 DDRII - 4,900/-
Asrock 1333 - D667 - 5,600/-
FoxConn 945 DDRII - 5,900/-
(One Year Warranty)
GigaByte 945 Gcm s2c - 6,000/-
Intel Original 945GCNL - 8,400/-

478 MOTHER BOARDS (One Year Warranty)
Energy DDR1 - 6,000/-
Longtron DDRI (Intel ship) - 6,900/-
MSI DDRII - 5,900/-
BioStar DDRII - 6,750/-

MONITORS (Three Year Warranty)
View Sonic 15" CRT Silver Black - 11,750/-
Samsung 15" CRT Black - 11,750/-
DigiMax 17" CRT Black - 14,000/-
Samsung 17" CRT - 15,900/-
Samsung
Daewoo 15" LCD Wide Screen - 19,500/-
(One Year Warranty)
View Sonic 17" CRT Silver Black - 16,250/-

ACCESSORIES
ATX Casing with 450W Power Supply - 4,400/-

DIGITAL CAMERA
Nikon 10.1 Mega Pixels

PRINTERS (One Year Warranty)
HP D1460 Printer - 4,900/-
HP D2460 Printer - 5,750/-
HP Laser Jet 1005 - 15,250/-
Samsung ML1640 Laser jet - 13,750/-
Epson LQ 300+II - 20,900/-

UPS (One Year Warranty)
Mecury 650W - 3,900/-
Power Tree 650W - 6,200/-
Power Tree 1200W(1.2Kv) - 12,250/-
(Two Year Warranty)
Personal 650W - 6,300/-

PEN DRIVE
Kingston 1GB - 950/-
Kingston 2GB - 1,350/-
(One Year Warranty)
Kingston 4GB - 2,350/-
Kingston 8GB - 4,600/-

SCANNER (One Year Warranty)
Mustek 1248UB - 6,600/-
Cannon Lide25 - 6,300/-
HP 2400 - 9,250/-
HP G3010 Negative Scanner - 16,750/-

TONER
HP 12A Original - 5,250/-
HP 13A Original - 5,350/-
HP 15A Original - 5,400/-
Samsung ML2010 - 7,750/-
* Warranty valid for 1 - 3 years

MUSIC WORLD & COMPUTERS
141 B, பலாலி வீதி, தபால்பெட்டி சந்தி, திருநெல்வேலி. 021 222 6554
(ஞாயிறு, விடுமுறை தினங்களிலும் திறந்திருக்கும்)





இப்போது விற்பனையில்

பொட்டம்மானை "பணயம்" கேட்கும் புதுடில்லி!

கிழக்குக்கோட்டையில் மீன் பிடிக்க கோட்டபாயா வகுத்த திட்டம்

'சார்க்' மாநாடும் விடுதலைப் புலிகளும்

கவிஞர் கண்ணதாசனின் கனவு குறித்து - பழ.நெடுமாறன் எழுதுகிறார்

படைத்தரப்பு மத்தியில் புற்றெடுத்துப் போயுள்ள ஆளணிப் பிரச்சினை

மனிதனுக்குள் ஒரு மிருகம் (தமிழகத்தின் புகழ் பெற்ற ஊடகவியலாளர் மதன் எழுதுகிறார்)

திருநெல்வேலியில் பற்றிய தீ! (தொடர் கட்டுரை)

ஒவ்வாமைக்கும் காரணம் ஒன்றா, இரண்டா?

நள்ளிரவில் ஒரு நாடகம் (திகில் நிறைந்த தொடர் கதை)

விமானக் கட்டண விலை ரூ: 35/-

குடும்ப மோதலால் தடுமாறுகிறார் தமிழக முதல்வர்

கீரையை விரும்பிச் சுவைக்க ...

தப்பிப் பிழைக்குமா காங்கிரஸ் ஆட்சி?

நீங்கள் விரும்பிப் படிக்கும் மற்றும் பல்சுவை அம்சங்கள்.

உதயன் முகவர்களிடம் தவறாது கேட்டு வாங்குங்கள்.

இப்போது விற்பனையில்



SUBRA 14

கருத்தரங்கு

தமிழ்
திரு.குழந்தை
22/07-25/07 9மணி - 2மணி வரை

இந்து நாகரிகம்
திரு. கந்த சத்தியதாசன் (ஆசிரிய ஆலோசகர்)
திரு. சந்திரன் (விரிவுரையாளர்)
22/07-25/07 2.30மணி - 6.00மணி

பௌதிக வியல்
திரு. சுகன் 24/07-27/07 பி.ப 3.00- 6.00 மணி

பயிற்சிப் பரீட்சைகளும் மாதிரி கையேடுகளும் வழங்கப்படும்
அனுமதிகள் 21.07 ற்கு முன் பெறவேண்டும்.



விக்னா கல்வி நிறுவனம்
தலைமை நிறுவனம் 52,ஸ்ரான்லி வீதி, யாழ்.
மாபெரும் கருத்தரங்கு
தமிழ்
திரு.குழந்தை
காலம்: 30.07.2008, 31.07.2008 9.00மணி
வெளி மாணவர்கள் அனுமதிகளை முன்கூட்டியே உறுதிப்படுத்தவும்



நிலா வெளியீடு
2ஆம் தவணைப் பரீட்சை
தரம் 01 முதல் 11 வரை வினாத்தாள்கள் பெற விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.
N.C.A
கல்வி நிலையம், இணுவில். 0776241573



கருத்தரங்கு
புவியியல்
காலம் : 22.07.2008
செவ்வாய் 9 மு.ப
பகுதி - I
ஆசிரியர்
S.P.கரன்
யூனிவேர்சல்
யா/இந்து மகளிர் கல்லூரி அருகே



மாபெரும் கருத்தரங்கு
விக்னா
தமிழ்
திரு.குழந்தை
★ நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த் திருந்த வினாக்களுக்கு விடைகள் அனுமதிகள் வரையறுக்கப்பட் டதால் 17.07.08 இலிருந்து பெற் றுக் கொள்ளவும்.
★ பஸ்ஸிலிருந்து வருபவர்கள் ஸ்ரான்லி றோட்டால் நடந்தும், சைக்கிளில் வருபவர்கள் சிராம்பியடி றோட்டாலும் வரவும்.
52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.



கருத்தரங்கு
தமிழ் திரு.குழந்தை
அளவையியல் திரு.கமல்
இந்து நாகரிகம் திரு.ஜெயக்குமார்
யூனிவேர்சல் யா/இந்து மகளிர் கல்லூரி அருகே.



புதிய பிரிவுகள்!!!
CB Computer Academy
20.07.2008(Sun) 21.07.2008(Mon)
Diploma in Accounting Packages
Dip. in DTP & Graphics Design
Diploma in Hardware and Networking
Dip. in Programming Languages
Diploma in ICT (Grade 10 & 11)
Diploma in Web Designing
Diploma in GIT (G.C.E A/L)
Internet & E-Mail
Diploma in Ms Office
Children Programme


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட்டினால் [illegible] 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.07.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org